தமிழ்ப் பண்ணை மலர் 4

திரையும் வாழ்வும்

ஏ. கே. செட்டியார்

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை-1

தமிழ்ப் பண்ணை
தியாகராயநகர் — சென்னை

முதற்பதிப்பு: ஜூன், 1943

சகல உரிமைகளும்
தமிழ்ப் பண்ணையாளர்களுக்கே

விலை ரூபாய் ஒன்று

சென்னை
கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹௌஸில்
அச்சிடப் பெற்றது

பதிப்புரை

ஸ்ரீ. ஏ. கே. செட்டியார் சினிமாவைப்பற்றி எழுதிய கட்டுரைகளின் தொகுதியே இந் நூல்.

முதலாவது கட்டுரையைத் தவிர, மற்ற கட்டுரைகள் தமிழ்ப் பத்திரிகைகளில் ஏற்கனவே வெளி வந்திருக்கின்றன. அவைகளை இங்கு வெளியிட அனுமதித்த ஆசிரியர்களுக்கு எங்கள் நன்றி.

தமிழ்ப் பண்ணையாளர்கள்.

பொருளடக்கம்

1.	திரையும் வாழ்வும்	7
2.	எமில் ஸோலா	14
3.	செய்திப் படம்	26
4.	மகாத்மா காந்தி படம்	40
5.	வெளிநாட்டில் சினிமாத் தொழில்	53
6.	சினிமாவுக்குச் செல்வதெப்படி ?	60
7.	சினிமாத் தியேட்டர்கள்	66

திரையும் வாழ்வும்

மக்களுடைய வாழ்க்கையில் சினிமா ஒரு நிரந்தர ஸ்தானத்தைப் பெற்று விட்டது. நிரந்தர மட்டுமல்ல; முக்கியமான ஸ்தானத்தையும் பெற்றுவிட்டது.

டெலிவிஷன் அபிவிருத்தியானால், சினிமாக் கலை மறைந்துவிடுமென்று சிலர் கருதுகின்றனர். அது முற்றிலும் தவறு. டெலிவிஷன் அபிவிருத்தியினால், ஒரு வேளை சினிமாவின் முக்கியத்துவம் குறையலாம். ஆனால் சினிமாவின் நிரந்தர ஸ்தானம் ஒரு பொழுதும் பாதிக்கப்படமாட்டாது.

சினிமாவுக்குப் பதிலாக டெலிவிஷன் வராது. ஆனால் சினிமாவுடன் டெலிவிஷனும் வளரும்.

சினிமாவினால் நாடகக்கலை மறைந்துவிடவில்லை, அதைப் போல டெலிவிஷனால் சினிமாக் கலை மறைந்து விடாது.

'சினிமாவைப் பார்த்துக் கெட்டுப் போகாதே' என்று சில பெரியார்கள் இன்னும் நமது நாட்டில் உபதேசம் செய்வதைக் கேட்கிறோம். ஆனால் இதே பெரியார்கள் சினிமாவுக்குச் செல்லுவதையும் நாம் பார்க்கிறோம். "தாங்கள் மட்டும் கெட்டுப்போனால் பாதகமில்லை; மற்றவர்களாவது கெடாமலிருக்க வேண்டும்" என்ற உயர்ந்த நோக்கம் தான் இவர்கள் புத்திமதி கூறுவதற்குக் காரணமாயிருக்க வேண்டும்.

நமது நாட்டில் காபிகிளப்புக்குச் செல்லுகிறவர்களின் தொகைக்கு அடுத்தபடியாக, சினிமாவுக்குச் செல்லுகிறவர்களின் தொகையைக் கூறலாம். சினிமாத் தொழிலுக்கும், காபிகிளப் தொழிலுக்கும், நெருங்கிய சம்பந்த முண்டு. ஒன்று காபி சாப்பிட்டு விட்டு சினிமாவுக்குப் போக வேண்டும்; அல்லது சினிமாப் பார்த்துவிட்டு காபி சாப்பிட வேண்டும். இரண்டு மில்லையானல் சினிமாக் கொட்டகையிலேயே, காபி, டீ, சாப்பிட வேண்டும். சினிமாவுக்காவது சிலருக்கு இலவச அனுமதி கிடைத்துவிடும்; ஆனல் காபி கிளப்புக்கு அனைவரும் பணம் கொடுத்துத்தான் ஆக வேண்டும்.

மதுரைக்குப் புதிதாக ஒருவர் வந்தார். வந்து இரண்டு நாளாயிற்று. 'மீனாட்சியம்மன் கோவிலைப் பார்த்தீர்களா?' என்று கேட்டேன். 'இல்லை' என்ருர், "அப்படியானல் இரண்டு நாட்களாக என்ன செய்தீர்கள்" என்றேன். "இரண்டு சினிமாக்கள் பார்த்தேன்" என்ருர்.

வெளியூரிலிருந்து சென்னைக்கு வரும் அன்பர்கள் சிலரோடு பேசிக்கொண் டிருந்தேன். அவர்கள் மிகவும் அவசரப்பட்டுக் கொண்டிருந்தார்கள். "யாரை யாவது பார்க்கப் போகிறீர்களா? என்ன அவசரம்?" என்றேன். "இல்லை, இல்லை, சினிமாவுக்கு நேரமாகி விட்டது" என்று சொல்லிக்கொண்டே கிளம்பி விட்டார்கள்.

முக்கியமான வெளியூர்களுக்குச் சென்ருல், அவ்வூர் வாசிகளைப் பார்த்து மூன்று கேள்விகளைக் கேளுங்கள்.

1. உங்களூரில் ஜனத்தொகை எவ்வளவு?
2. எத்தனை கோயில்கள் இருக்கின்றன?
3. சினிமாத் தியேட்டர் எத்தனை?

முதலிரண்டு கேள்விகளுக்கும் அபூர்வமாகத் தான் பதில் கிடைக்கும். அப்படி பதில் கூறினாலும் உத்தேசமாகத்தான் கூறுவார்கள். ஆனால் மூன்றாவது கேள்வியைப் பொறுத்த மட்டில் பெரும்பாலாக யாரைக் கேட்டாலும் சரியான பதில் கூறுவார்கள். சினிமாத் தியேட்டர் முதலாளியின் பூர்வோத்திரம் முதல், அந்த சினிமாக் கொட்டகைக்கு வந்த படங்களின் ஜாபிதா வரை எல்லாவற்றையும் கூறுவார்கள்.

சில சமயங்களில் நல்ல சினிமாப் படங்களுக்குச் சென்றால் பல கஷ்டங்கள் அனுபவிக்க நேரிடும். முதலாவது டிக்கட் வாங்குவது. இதற்குப் பணம் மட்டும் போதாது; திறமையும் வேண்டும். குஸ்தி போட்டு, பலரை இடித்துத் தள்ளியோ, அல்லது மற்ற மனிதர்களின் தோளில் ஏறி நின்றோ டிக்கட் வாங்க வேண்டும். இந்த முயற்சியில் சிலர் சட்டையைக் கிழித்துக் கொள்வார்கள். சிலர் மணிபர்ஸை இழப்பார்கள். ஆனால் சினிமா பார்க்க வேண்டுமென்ற உற்சாகத்தை யாருமே இழக்கமாட்டார்கள்.

பட்டப் பகலிலே, காயும் வெயிலிலே, தகரக் கொட்டகையில், ஓடாத விசிறிகளுக்குக் கீழே உட்கார்ந்து கொண்டு, மணிக் கணக்காக சினிமாவைப் பார்ப்பதென்றால் சுலபமான காரியமல்ல. இவ்வளவு கஷ்டங்களையும் சகித்துக் கொண்டு மக்கள் சினிமா

வைப் பார்ப்பதிலிருந்து, சினிமாவுக்கு, ஜனங்கள் மனதை வசீகரிக்கும் அபார சக்தி இருக்கிறது என்பது நன்கு விளங்குகிறது.

சினிமா, லட்சக்கணக்கான மக்களுடைய கவலையை மாற்றுகிறது. கோடிக்கணக்கான மக்களுக்கு சந்தோஷமான பொழுதைக் கொடுக்கிறது. சம்பந்தப்பட்ட நூற்றுக்கணக்கான தொழில்களுக்கு ஆதரவளிக்கிறது. லட்சக்கணக்கான மக்களுக்கு வேலையைக் கொடுக்கிறது. பல கலைகளை வளர்க்க உதவுகிறது. ஒரு நாட்டுக் கலையை மற்ற நாடுகளுக்கு எடுத்துக் காட்டுகிறது.

சினிமா, அதிர்ஷ்டவசமாக மனித சமூகத்துக்குக் கிடைத்த ஒரு நல்ல சாதனம். அந்தச் சாதனத்தை ஒரு சிலர் தீய வழியில் உபயோகிப்பதைப் பார்த்து சினிமாவே வேண்டாமென்று கூறுவது அறிவுடைமையாகாது. மிகக் கேவலமான புத்தகங்கள் வெளியாவதால், புத்தகமே படிக்கக் கூடாது என்று கூறுவது நியாயமாகுமா ?

அதைப் போலவேதான் சினிமாவும். நல்ல சாதனத்தைச் சிறந்த வழியில் உபயோகித்துக் கொள்வது நமது கடமை. அதை விடுத்துக் குறை கூறுவதில் அர்த்தமேயில்லை.

சினிமா சிறந்த சாதனம் என்பதை உலகம் ஒப்புக் கொண்டு விட்டது. ஒவ்வொரு நாட்டினரும் சினிமாவைத் தங்கள் தங்கள் நன்மைக்கு உபயோகப்படுத்துகின்றனர். வாழ்க்கையின் பல துறைகளிலும் சினிமா உபயோகிக்கப்படுகிறது.

உதாரணமாக, பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்குப் பாடம் கற்பிக்க சினிமாப் படங்களை உபயோகிக்கின்றனர். நியூ யார்க் நகரத்தைப் பற்றியோ, அல்லது இமயமலை உச்சியில் நிறைந்திருக்கும் பனிக்கட்டியைப் பற்றியோ மாணவர்களுக்கு ஆசிரியர்கள் கூறுவதை விட, அதையே சினிமாவில் காண்பித்தால் பலன் அதிகமுண்டாகிறது. செடிகள் வளருகிற விதத்தை மாணவர்கள் படத்தில் கண்ணுக்கு முன்பாகவே பார்க்கிறார்கள். செடிகள் வளர்வதற்காக நாள் கணக்கில் காத்திருக்க வேண்டியதில்லை. சில விநாடிகளில் பார்த்து விடலாம். கைத்தொழில் சம்பந்தமான படங்களும், அதாவது மண்ணெண்ணெய் எப்படி எடுக்கப்படுகிறது, மோட்டார் எப்படிச் செய்கிறார்கள் என்பவை போன்ற படங்கள், மாணவர்களின் அறிவை மட்டுமல்ல, ஆசிரியர்களின் அறிவையும் விசாலப்படுத்துகின்றன.

வைத்தியத் தொழிலுக்கும் சினிமா உபயோகமாகிறது. அருமையான, மைக்ராஸ்கோப் படங்கள் தயாரித்திருக்கிறார்கள். பெரிய ஆபரேஷன்களைப் படம் பிடித்திருக்கிறார்கள். வைத்தியக் கல்லூரி மாணவர்களுக்கு இவை பெரிதும் பயன்படும்.

ஜனங்களுக்கு சுகாதார விஷயங்களைக் கற்பிப்பதற்கும் கூட, இப்பொழுது சினிமாவை உபயோகிக்கிறார்கள்.

குதிரைப் பந்தயம் நாட்டின் நன்மைக்கு ஏற்றதல்ல. என்றாலும் குதிரைப் பந்தயத்தின் முடிவைக் கூறுவதற்கும் பல இடங்களில் சினிமாவை உபயோ

கப் படுத்துகிறார்கள். பந்தயம் முழுவதையும், மிக மெதுவாகப் படம் பிடிக்கும் முறையில் (Slow Motion) படம் பிடித்துத் திரையில் போட்டுப் பார்த்தால், எந்தக் குதிரை முன்னால் தலையை நீட்டிற்று என்பது நன்கு தெரியும்.

முற்போக்குள்ள வியாபார நிலையங்கள், பத்திரிகை விளம்பரத்தை விட, சினிமாப்பட விளம்பரங்களில் அதிக கவனம் செலுத்துகின்றன. தங்கள் வியாபாரப் பொருள்களை, விளம்பரப்படுத்த மக்கள் ரசிக்கும் வகையில் சிறு படங்களைத் தயாரிக்கின்றனர். இதற்கு விளம்பரப் படங்கள் என்று பெயர்.

சில ராஜாக்களும், செல்வத்திலே புரளும் சில பிரபுக்களும், தங்கள் பெருமையைத் தாங்களே பார்த்து மகிழ, தங்கள் வீட்டில் நடைபெறும் விசேஷங்களையும், மற்ற நிகழ்ச்சிகளையும் சினிமாப் படம் பிடித்துக் கொள்கின்றனர்.

கடைசியாக சினிமாப் படத்தின் முழு சக்தியையும் தங்கள் சாதகத்திற்காக உபயோகித்துக்கொள்ள இந்திய அரசாங்கத்தார் முன்வந்திருக்கிறார்கள். சினிமாவின் கடைசி உபயோகம் யுத்தப் பிரசாரப் படங்கள்.

சினிமாப் படங்கள் முழுதும் பிரசாரந்தான். பிரசாரம் இல்லாத சினிமாப் படமே கிடையாது. சில படங்கள் நேரடியாகப் பிரசாரம் செய்கின்றன. சில மறைமுகமாகப் பிரசாரம் செய்கின்றன. அதுதான் வித்தியாசம்.

புராணப் படங்கள் பக்தி பெருகப் பிரசாரம் செய்கின்றன. சமூகப் படங்கள் காதலைப் பற்றிப் பிரசாரம் செய்கின்றன. சில படங்கள் சமூக சீர் திருத்தத்தைக் குறித்துப் பிரசாரம் செய்கின்றன. சில சமூக சீர்திருத்தப் படங்கள், அறியாமலேயே சமூகம் குட்டிச் சுவராவதற்குப் பிரசாரம் செய்கின் றன. பொதுவாகப் படங்கள் சங்கீத வளர்ச்சிக்கும், மொழி வளர்ச்சிக்கும் பிரசாரம் செய்கின்றன. அரசி யல் படங்கள், அரசாங்கத்துக்குச் சாதகமாகப் பிர சாரம் செய்கின்றன, பிரசாரத்துக்காகவே அதிக மாக உபயோகிக்கப்படுவது செய்திப் படங்கள்தான். ஒரு நிகழ்ச்சியை பல விதமாக பல நிருபர்கள் எழுது வதைப்போல, ஒரு நிகழ்ச்சியைப் பல விதமாக காமி ராக்காரர்கள் படம் பிடிக்கிறார்கள். பத்திரிகை களின் கொள்கைக்கு ஏற்ப செய்திகளை உபயோகிப்ப தைப் போல, செய்திப் படக்கம்பெனியின் கொள் கைக்கு ஏற்ப, செய்திப் படங்களை அதன் ஆசிரியர் உபயோகிக்கிறார்.

படங்களில் அருமையான வீடுகள், நல்ல சேலை கள், சிறந்த நகைகளைப் பார்க்கிறோம். படம் பார்க் கும் சிலர், தாங்களும் அம்மாதிரிச் சாமான்களை வாங்க விரும்புகிறார்கள். இதனால் படங்கள், வீடு, சேலை, நகை முதலியவைகளைக் குறித்தும் பிரசாரம் செய்கின்றன.

எனவே ஒவ்வொரு படமும், தெரிந்தோ, தெரி யாமலோ, நேர்முகமாகவோ அன்றி மறை முக மாகவோ, ஒரு பொருளைக் குறித்தோ அல்லது பல பொருள்களைக் குறித்தோ பிரசாரம் செய்கிறது.

பலமுள்ள அரசாங்கத்துக்கும் ஒரு தனி மனிதனுக்கும் போராட்டம். ராணுவத்தின் கௌரவம் பெரிதா? அல்லது நாட்டின் நீதி பெரிதா? என்பதில் அறிஞர்கட்குள் போராட்டம். கத்தியின் முனைக்கும் பேனாவின் முனைக்கும் போராட்டம். வஞ்சகனுக்கும் நிரபராதிக்கும் போராட்டம். தலைவனின் உத்திரவுக்கும் மனச்சாட்சிக்கும் போராட்டம். சுதந்திரத்துக்கும் அடக்குமுறைக்கும் போராட்டம்.

இப் போராட்டங்கள் ஒரு தனி மனிதனின் வாழ்க்கையிலே சில சம்பவங்களாக உருக்கொள்கின்றன. உண்மையில் நம்பிக்கையுடைய ஒரு தனி மனிதன், நாட்டின் பெருமையையும் நீதியையும் நிலைநாட்டுவதற்காகத் தனது வாழ்க்கையை அர்ப்பணம் செய்கிறான். இவன் யார்? பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பிரெஞ்ச் நாட்டிலே தோன்றிய எமில் ஸோலா (Emile Zola) எனும் சிறந்த ஆசிரியன்.

இவனுடைய வாழ்க்கையைச் சிறந்த சினிமாப் படமாகத் தயாரித்த பெருமை வார்னர் பிரதர்ஸ்க்கு உரியதாகும். கீழ்த்தரமான துப்பறியும் கதைகளில் கவனம் செலுத்தும் மக்கள், இப்பொழுது புதிய புத்தகங்களில், சிறப்பாக வாழ்க்கைச் சரித்திரங்களில் கவனம் செலுத்துவதைக் காண்கிறோமல்லவா? இப் புரட்சி, புத்தக உலகில் மட்டுமல்ல, சினிமா உல

கிலும் ஏற்பட்டு விட்டது. ஒரு தனி மனிதனின் வாழ்க்கைச் சரித்திரம், சினிமா உலகிற்குச் சிறந்த முறையில் வருவது இதுவே முதலாவதாகும்.

நியூயார்க் நகரிலுள்ள சிறந்த தியேட்டர் ஒன்றில் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட ஜனங்கள் அமைதியாக உட்கார்ந்து இப்படத்தைப் பார்க்கின்றனர். எங்கும் நிசப்தம். எமில் ஸோலாவின் ஒவ்வொரு வார்த்தையையும் ஆர்வத்தோடு கேட்கின்றனர். பல சமயங்களில் இந்த ஜனங்களின் கண்களில் நீர் ததும்புகின்றது. சில சமயம் சந்தோஷ உணர்ச்சியால், சில சமயம் துக்கத்தினுல், தங்களை மறந்து 130 நிமிஷங்கள் இப்படத்தைக் கண்டு மகிழ்கின்றனர்.

சாதாரணமாக ஒரு படம் 60 முதல் 75 நிமிஷம் வரைதான் காட்டப்படும். இப் படத்தின் தன்மையைக் கருதி இதனுடைய அளவை இரட்டித்துள்ளார்கள். ஆனல் ஒன்று மட்டும் உண்மை. இந்த 130 நிமிஷங்களில் ஒரு விஞடியாவது ஜனங்கள் சோர்வோ அன்றி ஆயாசமோ அடைய வில்லை.

வறுமைக்கும் அறிவுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டல்லவா ? அறிஞன எமில் ஸோலா வறுமையிலே பிறந்து வறுமையிலே சிறிது காலம் வாழ்ந்தான். இவன் 1840-ம் வருடம் எய்க்ஸ் (Aix) என்னுமிடத்தில் பிறந்தான். தந்தை, இத்தாலியனுக்கும் கிரேக்கப் பெண்ணுக்கும் பிறந்தவர். தாய், பிரெஞ்சுக்காரி. எமில் ஸோலா இளமையிலேயே தனது தந்தையை இழந்தான். தாய், கஷ்டப்பட்டு வேலை செய்தாள். குடும்பத்தில் அரைக்காசுகூடக் கிடை

அமைதி ! வார்த்தை நன்ருகத்தான் இருக்கிறது. ஸோலா போன்ற சுதந்திர ஆசிரியர்கட்கு இவ்வுலகில் அமைதி ஏது ?

கொடுமை ! அதற்கும் ஓர் அளவுண்டு. ஆனல் பிரெஞ்ச் ராணுவத்தின் கொடுமைக்கு அளவேயில்லை. ராணுவத்தின் கொடுமைகள் எல்லாம் 'யுத்த தர்மம்' 'நாட்டுச்சேவை' 'தேச பக்தி' 'வீரத்தனம்' என்ற போர்வைகளால் மூடப்படுகின்றன. அறிவின்றி, ஒருவரை ஒருவர் கொல்லும் மிருகத்தனம் வாய்ந்த இப் பித்தர்கட்கு 'வீரர்கள்' என்று பெயர். மனித உணர்ச்சிக்கும் இவ்வீரர்கட்கும் வெகுதூரம். பிரெஞ்ச் ராணுவம் கட்டுப்பாடுடையது ; என்ருலும் ஊழல்கள் பல. இந்த ஊழல்களைப் பொது ஜனங்கள் கண்ணிலிருந்து மறைப்பது கட்டுப்பாடு. என்ன கட்டுப்பாடு ? உண்மையை வெளியிற் சொல்வதில்லை என்ற கட்டுப்பாடு !

பணம், ஒரு பொல்லாத வஸ்து, 'பணம் வந்திடப் பத்தும் பறந்து போம்.' தேசபக்தியும்கூடச் சில சமயங்களில் பறந்து போகும். வெளி நாட்டிலுள்ள இந்தியர்களில் சிலர் சிறந்த தேசபக்தர்கள். இவர்களில் பலர் வறுமை வந்துற்ற பொழுது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சிறந்த உளவாளிகள் ஆகி விடுகின்ருர்களல்லவா ? இந் நிலை எக்காலத்திலும் எந்நாட்டிலும் உண்டு. பிரெஞ்சு ராணுவத்தைச் சேர்ந்த ஒரு கர்னல், ஜர்மனிக்கு உளவாளியானுன். சில பீரங்கிகளை ரகசியமாக ஜர்மனிக்கு அனுப்புவதாக ஜர்மன் ஸ்தானீகருக்குக் கடிதம் எழுதினுன். இக் கடிதம்

எவ்விதமாகவோ பிரெஞ்சு ராணுவ அதிகாரிகளிடம் சிக்கிவிட்டது.

ராணுவ அதிகாரிகளின் அந்தரங்கக் கூட்டம். இந்தக் கர்னல், தான் கடிதத்தை எழுதவில்லை யென்றும் ராணுவக் குழுவைச் சேர்ந்த பொறுப்புள்ள ஒருவன்தான் இதை எழுதியிருக்க வேண்டுமென்றும் சாதித்தான். ராணுவ அதிகாரிகளின் கையெழுத்துக்களும் வாழ்க்கை வரலாறுகளும் கொண்ட புத்தகத்தைப் பரிசோதித்தனர். காப்டன் டிரேபஸ் (Dreyfus) தான் இக்கடிதத்தை எழுதியிருக்க வேண்டுமென்று தீர்மானித்தனர். குற்றமற்ற டிரேபஸ், துரோகி எனக் குற்றஞ் சாட்டப்பட்டான். வஞ்சகமாக டிரேபஸை கைதியாக்கினர்; குற்றவாளியுமாக்கினர். ஆயிரக் கணக்கான மைல்களுக்கப்பால் 'பேய்த் தீவு' (Devils Island) எனும் தனியிடத்தில் அவனைச் சிறை வைத்தனர்.

பாவம்! நிரபராதியான டிரேபஸ் கைதியானன். அவனது மனைவியும் மக்களும் ஏங்கினர். பொது ஜனங்கள் அவனைத் 'துரோகி' என்றே நினைத்தனர். பத்திரிகைகள் டிரேபஸைக் கண்டித்துத் தலையங்கங்கள் எழுதின. மூன்றுண்டுகள் சென்றன. ஜர்மன் ஸ்தானிகர் கர்னலுக்கு ஒரு கடிதம் எழுதினர். இக்கடிதம் பிரெஞ்சு ராணுவத்தாரிடம் சிக்கியது. கர்னல் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டார். ராணுவத் தலைவனுக்கும் ரகசிய இலாகாத் தலைவனுக்குந்தான் இவ்வுண்மை தெரியும்.

ரகசிய இலாகாவின் தலைவன் மனம் துடித்தது. டிரேபஸை விடுதலை செய்யவேண்டுமென்றும் கர்ன

லேத் தண்டிக்க வேண்டுமென்றும் ரகசிய இலாகாத் தலைவன் வாதாடினுன். ராணுவத் தலைவனின் கண்களில் தீப்பொறி பறந்தது.

'மூன்ருண்டுகளுக்கு மேற்பட்டு டிரேபஸை நாம் விடுவிக்க முடியாது. அவன் நிரபராதிதான். அவனை விடுவித்தோமாளுல் ராணுவத்தின் கௌரவம் அடியோடு பாழாகிவிடும். இந்த உண்மை உனக்கும் எனக்கும் மட்டுந்தான் தெரியும். இதை நீ வெளியிற் சொல்ல மாட்டாய். சொல்லக் கூடாது. இது உத்தரவு' என்ருன் ராணுவத் தலைவன். ராணுவ கௌரவத்தின் முன்னே, கேவலம் நீதி எம்மாத்திரம்?

எவ்விதமாகவோ டிரேபஸின் மனைவிக்கு இக் கடிதத்தின் நகல் கிடைத்தது. மற்றும் பல முக்கிய கடிதங்களையும் எடுத்துக்கொண்டு ஸோலாவைப் பார்க்க ஓடினுள் டிரேபஸின் மனைவி. செல்வத்திலும் சுகத்திலும் புரண்டு கொண்டிருந்த ஸோலா, டிரேபஸின் மனைவி, தன்னைப் பார்க்க வந்திருக்கிருள் என்பதை அறிந்தும் தயங்கினுன். 'என் கணவன் நிரபராதி. குற்றம் செய்தவன் ராணுவ உடையில் திரிகிருன். நிரபராதி தனித் தீவில் வாழ்க்கையைப் பாழாக்குகிருன். பிரெஞ்சு நாட்டில் நீங்கள் ஒருவர் தான் எனது கணவனைக் காப்பாற்றக்கூடும். நீங்கள் எனக்கு உதவி செய்வீர்கள். செய்யத்தான் வேண்டும்' என்று உருக்கமுடனும் உறுதியுடனும் கூறிளுள் டிரேபஸின் மனைவி.

தர்ம சங்கடமான நிலைமை ஏற்பட்டது ஸோலாவுக்கு. டிரேபஸ் உண்மையில் துரோகி என்றும்,

துரோகி தண்டிக்கப்பட்டது நியாயமே என்றும் ஸோலா கருதினுன். ஏன்? பிரெஞ்சு தேசம் முழுவதுமே அப்படித்தான் நினைத்தது. ஜர்மன் ஸ்தானீகர் கர்னலுக்கு எழுதிய கடிதத்தின் நகல், ஸோலாவின் மனதை அடியோடு மாற்றிற்று. வாழ்க்கையின் ஆரம்பத்தில், தான் பட்ட கஷ்டங்களெல்லாம் நினைவுக்கு வந்தன. ஒரு நிரபராதியின் வாழ்க்கை ஏன் பாழாக வேண்டும்? அவன் மனிதன்தானே? அவனுக்கு மனைவி மக்களும் உண்டல்லவா? ராணுவத்தின் பொய்யை, நாடு முழுவதும் நம்புகிறது. ஆனுல் நான் தனி மனிதன். ஆயினும் உண்மை எவ்வளவு பெரிது? உண்மையை யாரும் எப்பொழுதும் மறைக்க முடியாது. சில காலம் மறைந்ததுபோல் தோன்றும். ஆனுல் உண்மையில் மறையாது' என்று கூறினுன் ஸோலா. 'ல யூரப்' என்ற பத்திரிகையில் பிரெஞ்சு நாட்டின் குடியரசுத் தலைவருக்குப் பகிரங்கக் கடிதம் எழுதினுன். இக் கடிதம் சரித்திரப் பெருமை வாய்ந்தது. உண்மை, வீரம், உணர்ச்சி முதலியவைகள் இக் கடிதத்தில் ததும்புகின்றன.

பொதுமக்களிற் பலரும், ராணுவத்தால் தூண்டப்பெற்ற சிலரும் ஸோலாவை எதிர்த்தனர். இவ்வறிஞனின் அரிய நூல்கள் தீக்கிரையாக்கப்பட்டன. 'ல யூரப்' பத்திரிகாலயத்தை இடித்துத் தகர்த்தனர். ஸோலா, டிரேபஸ், ஆகிய 'இரு துரோ'கிகளைப் போன்று உருவம் தயாரித்து அதனைக் கொளுத்தினர். ராணுவத்தார் ஸோலாமீது வழக்குத் தொடர்ந்தனர். நீண்ட நாள் வழக்கு நடைபெற்றது. நீதியும் ராணுவ அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டுவிட்டது. ஸோலாவும், அவன் வக்கீல்களும் டிரேபஸ் குற்ற

வாளி அல்லவென்றும் ராணுவம் குற்றமுடைய தென்றும் நிரூபித்தார்கள். ஆயினும் என்ன பயன்? ஸோலாவைத் தண்டிக்காவிட்டால் தனது பதவியை ராஜீநாமாச் செய்வதாகப் பயமுறுத்தினன் ராணுவத் தலைவன். 'ஸோலாவைத் தண்டியுங்கள். ராணுவத் தின் கௌரவத்தைக் காப்பாற்றுங்கள்' என்று அல றினர் ராணுவ அதிகாரிகள். 'மனித உள்ளம்' படைத்த நீதிபதியும் பன்னிரண்டு ஜூரிகளும் 'ஸோலா குற்றவாளி' என்று ஏகமனதாய் தீர்மா னித்தனர். ஒரு வருட சிறையும் மூவாயிரம் பிராங்க் அபராதமும். யாருக்கு? உண்மையை அஞ்சாது வெளிப்படுத்திய ஒரு சுதந்திர ஆசிரியனுக்கு!

ஸோலா, பிரான்சு தேசத்தில் மட்டுமல்ல, உலகி லேயே புகழ்படைத்தவன். அவன் நண்பர்கள் அவனை இங்கிலாந்து போய், பத்திரிகைகளுக்கு எழுதிப் போ ராடும்படி செய்தனர். மாதம் ஒன்றுக்குப் பத்து லட் சம் உணர்ச்சி ததும்பிய வார்த்தைகள் கொண்ட கட் டுரைகள் எழுதினன் ஸோலா. பிரான்சின் நீதி முறையை உலகம் எள்ளி நகையாடிற்று; ஏளனம் செய்தது. பிரெஞ்சு அரசாங்கத்தில் மாற்றம் ஏற் பட்டது. புதிய யுத்த மந்திரி டிரேபஸின் வழக்கை ஆராய்ச்சி செய்தான். உண்மை வெளியாயிற்று. கர்னல் தற்கொலை செய்துகொண்டான். ராணுவத் தலைவன் தனது பதவியை ராஜீனமாச் செய்தான். மற்றைய அதிகாரிகள் சிறைப்பட்டனர்.

இங்கிலாந்தில் மறைந்து திரிந்த ஸோலாவுக்கு இவ்விஷயம் எட்டிற்று. ஒரு குழந்தையைப்போலத் துள்ளிக் குதித்தான். 'எனக்கு அறிமுகமில்லாத—

எவ்விதத்திலும் சம்பந்த மில்லாத எந்த ஒரு மனிதன் உரிமைக்காக எனது செல்வத்தை, நாற்பதாண்டுகள் சம்பாதித்த புகழைத் தியாகம் செய்து போராடினேனே, அந்த மனிதனின் கைகளை ஒரு முறையாவது நான் குலுக்குதல் வேண்டும்' என்று கூறி ஆனந்தக் கண்ணீர் பெருக்கினான்.

'சுதந்திரத்தின் பெருமையை நிலைநாட்டிய பிரான்சு தேசம் நீதியின் பெருமையையும் நிலைநாட்டி விட்டது. தேசத்தைத் துப்பாக்கியாலல்ல—எண்ணங்களினால் ஆளவேண்டும். உலகில் ஏன் ராணுவம் தலைவிரித் தாடுகிறது? இக் கொடிய பேயை அடக்குவது அறிவுள்ள ஒவ்வொரு மனிதனின் கடமையல்லவா? இன்றிரவில் லட்சக் கணக்கான இளஞ் சிறுவர்களும் சிறுமிகளும் லண்டன், பாரிஸ், பெர்லின் முதலிய நகரங்களிலும் உலகின் ஏனைய பகுதிகளிலும் அமைதியாக உறங்குகின்றனர். இவ் விளங் கொழுந்துகள் பெரியவர்களான பின்னர் ஏன் ஒருவரை யொருவர் கொல்லவேண்டும்? ஒருவரை யொருவர் கொல்வது தர்மமா? நீதியா? பெருமையா? இதனால் விளையும் பயன் என்ன? கோடிக் கணக்கான பணத்தை இம் மிருக உணர்ச்சியைப் பரப்புவதற்காக ஏன் செலவிடவேண்டும்?' என்றெல்லாம் பலவாறாக எண்ணுவான் ஸோலா. 'நீதி' எனும் பெயர் கொண்ட சிறந்த புத்தகத்தை டிரேபஸ் விடுதலைக்குப் பின் 1902-ல் எமில் ஸோலா எழுதினான்.

பேய்த் தீவில் தனிமையில் துன்பம் அநுபவித்த டிரேபஸ், அரசாங்க உத்திரவைக் கண்டு ஆச்சரியமுற்றான். சேனைகள் அணிவகுத்து நிற்க பிரெஞ்சு

சேனையின் தலைமைப் பதவி அவனுக்கு அளிக்கப்பட்டது. எந்த ராணுவம் அவனைத் துரோகி என்று கருதி நாடு கடத்திற்றோ அதே ராணுவம் இன்று அவனைத் தனது தலைவனாகக் கொண்டது. ஓடிவந்த தனது மனைவியை அன்போடு கட்டித் தழுவினான். எல்லோரையும் உற்று நோக்கினான். 'ஸோலா - ஸோலா எங்கே, என்றான். அன்றையபத்திரிகை ஒன்றை அவன் கையில் கொடுத்தனர். தன்னை மறந்து கண்ணீர் உகுத்தான் டிரேபஸ். ஏன்? அப் பத்திரிகையின் முன் பக்கத்தில் பெரிய எழுத்துக்களில் காணப்படுவதென்ன?

'ஸோலா இறந்தான்'

எதிர்பாராத தீ விபத்தினால் ஸோலா இறந்தான். ஆனால் அவன் புகழ் என்றும் இறவாது. உண்மை-உண்மை-உண்மை. இந்த ஒன்றுக்காகவே தனது சுக வாழ்க்கையை அர்ப்பணம் செய்தான்.

ஸோலாவின் வாழ்க்கை - அதிகாரத் திமிர் படைத்தவர்கட்கு - கேவலம் ஹானரரி மாஜிஸ்ட்ரேட் பதவி கிடைத்தால் வீதியிற் போகின்ற வண்டிக்காரனை அதட்டுகின்ற சுபாவம் படைத்தவர்கட்குப் புத்தி கற்பிக்கும். பணம், பதவி இரண்டிற்காக தேசத்தைக் காட்டிக்கொடுக்கும் துரோகிகளின் மனதை மாற்றும். தாங்களே அறிஞர்களென்று தற்பெருமை கொண்டிருப்பவர்களின் அறியாமையைப் புலப்படுத்தும். ஸோலாவின் தியாகம் இளைஞர்கள் உள்ளத்தில் புத்துணர்ச்சியை உண்டாக்கும். ஸோலா—சிறந்த மனிதன். அவனைப் போன்ற பலர் நம் நாட்டிலும் வாழ்ந்திருக்கின்றனர். அவர்

களைப் பற்றி நாம் அதிகம் சிந்திப்பதில்லை. நாட்டுக்காக எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்த வீரர்களின் வாழ்க்கைச் சரித்திரம் என்றைய தினம் இந்தியச் சினிமாவில் தோன்றப்போகின்றது?

எமில் ஸோலாவாக நடித்தது யார்? பால் மியூனி (Paul Muni) எனும் தலைசிறந்த நடிகன். இப்படம் ஹாலிவுட்டில் வார்னர் பிரதர்ஸ் கம்பெனியாரால் சிறந்த முறையில் தயாரிக்கப்பெற்றது. எனவே ஒலிப் பதிவைப் பற்றியும் ஒளிப் பதிவைப் பற்றியும் கூற வேண்டிய அவசியம் இல்லை. என்ன ஆச்சரியம்? இந்தப் படத்தில் ஒரு பாட்டுக்கூட இல்லை. தமிழர்களாகிய நீங்கள் இதை எப்படி நம்பப்போகிறீர்கள்?

[இந்தக் கட்டுரை 1937ல் நியூயார்க்கில் எழுதப்பட்டது.]

செய்திப் படம்

"புத்தம் புதிய கலைகள் மெத்த வளருது மேற்கே" என்றார் பாரதியார். இப் புதிய கலைகளிலே சினிமாக் கலை சிறப்பு வாய்ந்தது. சிறப்பு வாய்ந்த இக் கலையிலே செய்திப் படம் முக்கியமானது.

சினிமா ஒரு கலையா? என்று சிலர் வினவக் கூடும். சினிமா நிச்சயமாக ஒரு கலைதான். சந்தேகமே கிடையாது. நாம் ஒன்றை நேரில் பார்ப்பதற்கும் அதனையே சினிமாவில் பார்ப்பதற்கும் ஒரு குறிப்பிட்ட வித்தியாசம் இருக்கிறது. இந்த வித்தியாசந் தான் சினிமாவை ஒரு கலையாகச் செய்கிறது. இதனை நம்புங்கள். இல்லையானால் உலகிற் சிறந்த டைரக்டர்களில் ஒருவரான புதோவ்கின் என்ற ரஷ்யரைக் கேளுங்கள்.

"நமக்கு, சினிமா, கலைகளிலே மிக முக்கியமானது" என்றார் லெனின். சினிமாவை முதன் முதலில் வெற்றிகரமாகப் பிரசாரத்திற்கு உபயோகப் படுத்திக் கொண்டவர்கள் ரஷ்யர்கள். இன்று ரஷ்யாவை உருவாக்கிய முக்கியமான அம்சங்களிலே சினிமாவும் ஒன்று. அதனால்தான் கலைகளிலே மிக முக்கியமானது என்றார் லெனின்.

"சினிமா, அதிலும் செய்திப் படங்கள் நமது தேசத்தின் நிரந்தரமான செல்வம்" என்கிறார் அமெரிக்கத் தலைவரான ரூஸ்வெல்ட். ஜெர்மனியில்

ஹிட்லர், பிரசார மந்திரியான டாக்டர் கோபல்ஸையே சினிமாவின் தலைவராக நியமித்துள்ளார். வெளிநாட்டு உதவி மந்திரியே செக்கோஸ்லோவாக்கியாவில் செய்திப் படங்களின் ஆசிரியராக இருக்கிறார். இங்கிலாந்தில் பிரிட்டிஷார், மட்டமான தங்களுடைய படங்களை சட்டத்தினால் பாதுகாத்துக் கொள்ளுகிறார்கள். பிரான்ஸ் தேசத்தில் சினிமாவுக்ென்று தனியாக ஒரு மந்திரி நியமிக்கலாமா, என்று ஆலோசிக்கின்றனர். இத்தாலி சர்வாதிகாரியும் துருக்கி சர்வாதிகாரியும் காமிராக்களுக்கு முன்னே புன்னகை செய்து தங்கள் கொள்கைகளைப் பிரசாரம் செய்யத் தயங்குகிறார்களில்லை. சண்டைக்கு முன்னர், சீனாவிலே மத்திய அரசாங்கத்தார் சொந்தமாக சினிமா செய்திப் படங்கள் தயாரித்துவந்தனர். ஜப்பானியர்கள் இவ்விஷயத்திலும் சீனர்களுக்கு இளைத்தவர்கள் அல்ல. நார்வே, ஸ்வீடன், டென்மார்க், ஹாலந்து, ஆஸ்திரியா, ஹங்கேரி, ருமேனியா போன்ற நாடுகளில் அரசாங்கங்கள் சினிமாக் கலை அபிவிருத்திக்கு உதவி செய்கின்றன.

லேடி ஆஸ்டர் போன்ற பிரபல தலைவிகளும், பெர்னுடு ஷா போன்ற அறிஞர்களும், சினிமாவில் தோன்ற ஆரம்பித்துவிட்டார்கள். அப்பாடா! உலக முழுவதும் எப்படி சினிமாவை ரசிக்கிறது! உலகத்தில் இதுவரை எந்தக் கலையும் அடைந்திராத ஒரு சக்தியை - ஒரு உன்னத நிலையை - ஒரு பெருமையை இன்று சினிமாக் கலை அடைந்திருக்கிறது.

சினிமா உலகின் தலைநகர் ஹாலிவுட். இவ்வழகிய நகர் அமெரிக்காவின் பசிபிக் கரையோரத்

தில் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரையடுத்திருக்கிறது. இங்குள்ள மூன்று லட்சம் மக்களிலே சுமார் இரண்டு லட்சம் பேர் சினிமாத் தொழிலிலே ஈடுபட்டவர்கள். அமெரிக்காவிலுள்ள முதல் மூன்று முக்கிய தொழில்களிலே, சினிமாத் தொழிலும் ஒன்று.

காதற் கதைகளையும் பேரறிஞர்கள் வாழ்க்கைச் சரிதைகளையும், காமவெறியூட்டும் ஆபாசங்களையும் படம் பிடிக்கும் அமெரிக்கர்கள் செய்திப் படங்களையும் தயாரிக்கின்றனர். முதன் முதலாக செய்திப் படத்தைக் கண்டுபிடித்தவர் ஒரு பிரஞ்சுக்காரர். தற்செயலாக ஒரு வீடு தீப்பற்றி எரியும்பொழுது இவர் படம் பிடித்தாராம். அது ஒரு செய்தி! அதிலிருந்து செய்திப் படம் தயாரிக்கும் எண்ணம் அவருக்கு உதித்தது. 1927-ல் தான் பேசும் செய்திப் படம் முதன் முதலாகத் தோன்றியது.

செய்திப் படங்களின் தன்மையையும் அதன் தேவையையும் அமெரிக்கர்கள் நன்குணர்கின்றனர். 12 கோடி மக்களுள்ள அந் நாட்டிலே சுமார் 20 ஆயிரம் தியேட்டர்கள் இருக்கின்றன. இதில் சில நூற்றுக் கணக்கான தியேட்டர்களைத் தவிர வேறு எல்லாத் தியேட்டர்களிலும் செய்திப் படங்கள் காட்டுகிறார்கள்.

“என்ன சமாசாரம்?” என்று சாதாரணமாகக் கேட்கிறோம். சமாசாரங்களைத் தெரிந்துகொள்வதிலே எல்லோருக்கும் ஒரு பிரியம் இருக்கத்தான் செய்கிறது. சமாசாரங்களைத் தெரிவிக்கும் நாகரிக சாதனம், டெலிவிஷன் வரும்வரையில் மூன்றுதான்— பத்திரிகை, ரேடியோ, செய்திப் படம்.

பத்திரிகையில் ஒரு விஷயத்தைப் படிக்கிறோம். ரேடியோவில் அதே விஷயத்தைக் கேட்கிறோம். ஆனால் செய்திப் படத்தில் அதே விஷயத்தை பார்த்தும் கேட்டும் மகிழ்கின்றோம். பத்திரிகையில் ஒரு விஷயத்தை நாம் படிக்காமல் இருந்துவிடக்கூடும், ரேடியோவில் ஒரு விஷயத்தை நாம் கேட்காமல் இருந்துவிடக்கூடும். ஆனால் சினிமாவுக்குச் சென்றால் செய்திப் படத்தை நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், பார்த்துத்தான் ஆகவேண்டும். உலகத்திலே ஆறில் ஒரு பங்கு மக்கள் அதாவது சுமார் 30 கோடி மக்கள் வாரந்தோறும் சினிமாவுக்குச் செல்கிறார்கள். இவர்கள் மனதிலே விஷயங்களைப் பதிய வைப்பதற்கு, ஒரு கொள்கையைப் பரப்புவதற்குப் பத்திரிகை, ரேடியோ, ஆகிய இரண்டையும் விட செய்திப் படங்கள் அதிக சக்தி வாய்ந்தவை என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர்.

அமெரிக்காவில் இப்பொழுது ஐந்து பெரிய செய்திப்படக் கம்பெனிகள் இருக்கின்றன. அது தவிர 16 மில்லி மீட்டர் எனும் சிறிய அளவுப் படங்கள் காட்டும் செய்திப் படக் கம்பெனியொன்றும் இவ்வாண்டு முதல் தொடங்கப்பட்டிருக்கிறது. ஸ்டுடியோக்களில் படங்கள் பிடிப்பதைவிட, செய்திப் படங்கள் பிடிப்பது மிகவும் கஷ்டமானது; அபாயகரமானது. ஒரு ஸ்டுடியோவில் காமிராக்காரர் பலவித விளக்குகளின் உதவியால் ஒன்றைப் படம் பிடிக்கிறார். அது கெட்டுவிட்டால் மீண்டும் ஒரு முறை படம் பிடிக்கிறார், ஆனால் செய்திப் படம் அப்படியல்ல. எந்த நேரத்திலும் சம்பவங்கள் நிகழலாம். வெயில், பனி, இரவு முதலிய எதனையும்

பொருட்படுத்தாமல், இயற்கையில் மாறும் வெளிச் சத்தின் உதவிகொண்டு செய்திப் படக் காமிராக் காரர்கள் படம் பிடிக்க வேண்டும். ஒரு முறை போனுல் மறு முறை வராது.

ஸ்டூடியோக்காரர்கள் நடிப்பதைப் படம் பிடிக் கின்றனர். செய்திப் படக்காரர்கள் நடப்பதைப் படம் பிடிக்கின்றனர். இதுதான் வித்தியாசம்.

செய்திப் படக்காரர்களுக்கு பரந்த இவ்வுலகும் ஆழ்ந்த கடலுந்தான் ஸ்டூடியோ. அமெரிக்கத் தலை வர் ரூஸ்வெல்டும், ஜப்பானிய சக்கரவர்த்தியும், உறுமி விழும் சர்வாதிகாரிகளும், வாழ்விழந்த அபி சீனியச் சக்கரவர்த்தியும், உலகெங்கும் தனிப்புகழ் படைத்த காந்தியடிகளும், ஆகாய விமானத்தில் பறக் கும் ஸ்ரீமதி அமிஜான்சனும், குத்துச் சண்டையில் பிரசித்தமான ஜோயிஸ் ஜோவும், வாரந்தோறும் "பாஷன்" மாற்றும் பிரெஞ்சுப் பெண்களும், படகுப் பந்தயங்களிலே கவிழ்ந்து விழும் வீரர்களும் இச் செய்திப் படங்களின் நட்சத்திரங்களிலே சிலராவர்.

பாக்ஸ் மூவிடோன் கம்பெனி இன்று உலகிற் சிறந்த செய்திப்படக் கம்பெனியாகத் திகழ்கின்றது. எல்லா நாடுகளிலும் இவர்களுக்குப் பிரதிநிதிகள் இருக்கிறுர்கள். நூற்றைம்பதுக்கு மேற்பட்ட காமி ராக்காரர்கள் எப்பொழுது செய்திகள் நிகழும் என்று காத்துக்கொண்டிருக்கின்றனர். பாரமவுண்ட், பாதே, நியூஸ் ஆப்தி டே, யூனிவர்சல் என்பன மற்ற கம் பெனிகளின் பெயர்களாகும்.

இக்கம்பெனிகள் வாரம் இருமுறை படங்கள் வெளியிடுகின்றன. ஒவ்வொரு படமும் சுமார் 900

அடி நீளம். செய்திகளை யார் முதலில் வெளியிடு கிறார்கள் என்பதிலே இக்கம்பெனிகளுக்குள் பலத்த போட்டி.

சில வருடங்களுக்கு முன்னே ஒரு அமெரிக்கத் தலைவர் பதவியேற்கும் தினம் வந்தது. இந்நிகழ்ச்சி, தலைநகரான வாஷிங்டன் நகரில் நடைபெறுவது. செய் திப் படங்களின் தலைமைக் காரியாலயங்கள் எல்லாம் நியூயார்க் நகரில். வாஷிங்டனுக்கும் நியூயார்க்குக் கும் சுமார் 300 மைல். காலையில் வாஷிங்டனில் நடைபெறுவதை அன்று மாலையே நியூயார்க்கில் காண்பிக்க வேண்டுமென இரு கம்பெனிகள் போட்டி யிட்டன. இரண்டு கம்பெனிகளும் பணச் செல வைச் சிறிதும் பாராமல் ஏற்பாடுகள் செய்தன.

ஒரு கம்பெனியார், படம் பிடித்ததும் அதனைத் தனி ஆகாய விமானத்தில் கொண்டு வருவதென முடிவு செய்தனர். ஆகாய விமானத்தை விட வேக மானது இந்த இருபதாம் நூற்றாண்டில் வேறென்ன இருக்கிறது? மற்றொரு கம்பெனி ஆசிரியருடைய மூளை வேகமாக வேலை செய்தது. உடனே ரயில்வே கம்பெனிக்கு டெலிபோன் செய்தார். தனி ரயில் அமர்த்தினார். வெறும் ரயிலல்ல, ஓடுகிற ஸ்டூடியோ அது. அந்த ரயிலிலேயே லாபரட்டரி, எடிட்டிங் ரூம், மேக்கப் ஸ்டூடியோ வியாக்கியான கர்த்தா, ஆசிரியருடைய காரியாலயம், எல்லாம் அமைக்கப் பட்டு விட்டன.

குறிப்பிட்ட நாளில் வாஷிங்டனில் படம் பிடித்த னர். ஒருவருடைய படம் ஆகாய விமானத்தில் சென் றது. மற்றொருவருடைய படம் ஸ்பெஷல் ரயிலுக்கு

வந்தது. ஒரு படத்தைக் கழுவி, ஒழுங்குபடுத்தி, வியாக்கியானம் செய்து பிரதி எடுப்பதற்கு எவ்வளவு வேகமாக வேலை செய்தாலும் குறைந்தது ஐந்து மணி நேரமாகும். வாஷிங்டனிலிருந்து நியூயார்க் செல்ல சுமார் ஐந்து மணி நேரந்தான் ஆகிறது. ரயில் நியூயார்க்கை யடைந்ததும் முதலாவது "காப்பி தயாராகி" விட்டது. உடனே 'டைம்ஸ் ஸ்கொயரி'லுள்ள செய்திப் படத் தியேட்டருக்கு இதனை அனுப்பினர். ஆகாய விமானத்தில் படம் கொண்டு வந்தவர் கதியென்ன? ஆகாய விமானம் நியூயார்க்கை யடைவதற்கு ஒன்றரை மணி நேரம் ஆயிற்றல்லவா? அந்த ஒன்றரை மணி நேரம் தாமதத்திற்குப் பிறகு அந்தப் படம் வெளியாயிற்று. செய்திப் படத்திற்கு 'வேகம்' மட்டும் முக்கியமல்ல. அதோடு மூளையும் தேவை!

தியேட்டரில் உட்கார்ந்து சுகமாகப் படம் பார்க்கும் மக்களுக்கு சில விநாடிகள் அதிர்ச்சிகளை உண்டாக்கக்கூடிய செய்திகளைத் தயாரிப்பதற்காகப் பல காமிராக்காரர்கள் தங்கள் உயிரையே தியாகம் செய்திருக்கின்றனர். மகா யுத்தம், அபிஸீனிய யுத்தம், ஸ்பெயின் யுத்தம், சீன யுத்தம் முதலியவைகளை நேருக்கு நேராக நாம் பார்ப்பதற்கு வீரம் நிறைந்த இக்காமிராக்காரர்களே காரணம். இவர்களுடைய பெயர்கள் உலகினருக்குத் தெரியாமலே போய்விடலாம். ஆனல் கலை வளர்ச்சிக்காக உயிர் துறந்த இவ்வீரர்களின் தியாகம் ஒரு நாளும் வீண் போகாது.

செய்திப் படங்கள் வெறும் படங்கள் அல்ல. இவைகள் விஷயங்களை விளக்குகின்றன; அறிவை

யூட்டுகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக சரித்திரத்தை 'ரிகார்டு' செய்கின்றன.

நினைத்தாலும் திடுக்கிடத் தகுந்த நிகழ்ச்சிகள் பல படம் பிடிக்கப்பட்டிருக்கின்றன. ஹிண்டன்பர்க் ஆகாய விமானம் எரிந்து வீழ்வதும், சீனர்கள் வீதிகளிலே சுட்டு வீழ்த்தப்படுவதும், ஆகாய விமானங்களிலிருந்து குண்டுகள் எறிந்து நகரங்களையும் மக்களையும் நாசப்படுத்துவதும் சகிக்க முடியாத காட்சிகளல்லவா? நரம்புத் தளர்ச்சி யில்லாமல் இவைகளை எப்படிப் படம் பிடித்திருக்கிறார்கள்! பல சமயங்களிலே இந்த செலூலாய்ட் சுருளைகள் தனி ஆகாய விமானங்களிலே பிரயாணம் செய்கின்றன. அபிசீனியாவின் மாஜி மன்னர் ஹெயிலி ஸெலாஸி பட்டாபிஷேகத்தின்போது எடுத்த படங்கள் பல நாடுகளுக்கு ஆகாய விமானங்களிலே அனுப்பப்பட்டன.

ஒழுங்காகச் செய்திப் படங்களைத் தயாரிக்கும் துறையில் அமெரிக்கர்கள் தலை சிறந்து விளங்குகின்றனர். இரவு 9-மணிக்கு ஒரு செய்திப் பட ஸ்டூடியோவில் எவ்வளவு பரபரப்புக் காணப்படுகிறது! உலகின் பல பாகங்களிலிருந்தும் வரும் படங்கள் திரையில் காண்பிக்கப்படுகின்றன. ஆசிரியர் அதற்கு வியாக்யானம் எழுதுவார். சுத்தமான வாக்குள்ளவர்கள்தான் இதனைப் பேசுவார்கள். படத்தில் இயற்கையாக உள்ள சப்தம், பின்னணி சங்கீதம், வியாக்யானம் ஆகிய மூன்று சப்தங்களும் ஒன்றாகப் பதிவு செய்யப்படுகின்றன. அன்றிரவே இப்படங்கள் அச்சாகி விடுகின்றன. ஒவ்வொரு பிரிண்டிங் மெஷினும் ஒரேசமயத்தில் எட்டு படங்கள் தயார் செய்கின்

றன. இவைகளிற் சில அன்றிரவே ஆகாய விமானத்தில் கொண்டு போகப்படுகின்றன.

வியாக்யானம் செய்பவர்களுக்கு ஆங்கிலத்தில் Commentators என்று பெயர். பொதுவாக இவர்கள் ரேடியோவில் சுத்தமாகப் பேசுவதில் பிரசித்தி பெற்றவர்கள். அமெரிக்கர்களுக்கு நகைச்சுவை இயற்கையிலேயே அதிகம். சாரமற்ற விஷயங்களையும் நகைச்சுவையினுல் ரசிக்கவைத்து விடுவார்கள். அமெரிக்காவில் ஐதாகோ என்ற ஸ்டேட்டில் ஒரு குடியானவனுடைய நிலம் திடீரென இயற்கையால் ஒரு பாதாளக் கிடங்காக மாறி விட்டது. இதனை ஜனங்கள் ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டிருந்தனர்.

அப்பொழுது வியாக்யானம் செய்பவர் "அந்த குடியானவன் ஒரு பரம ஏழை. பாதாளக் கிடங்குகள் அவனுக்குத் தேவையில்லை. இழந்துபோன விளை நிலத்தைத்தான் அவன் விரும்புகிருன்" என்று கூறிய பொழுது எல்லோரும் சிரித்தனர்.

வியாக்யானம் செய்பவர்களிலே லோவல் தாமஸ், ஜீன் பால் கிங் முதலியவர்கள் மிகப் பிரசித்தி பெற்றவர்கள். ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொருவர் வியாக்கியானம் செய்வது புது முறை. பெண்கள் பகுதிக்குப் பெண்கள் விளக்கிக் கூறுவர்.

குதிரைப் பந்தயம் சம்பந்தமாக வியாக்யானம் கூறுவதிலே பிரபலமானவர் கிளாம் மெக்கர்த்தி என்பவர். குதிரைகள் எவ்வளவு வேகமாக ஓடுகின்றதோ அவ்வளவு வேகமாக இவர் பேசுவார். ஒவ்வொரு வார்த்தையும் சுத்தமாக இருக்கும். ஆனுல் அவர் பேச்

சிலே ஒரு ஆர்வம், ஒரு பரபரப்பு. சில சமயங்களில் அவர் பேசும் பொழுது நாம் குதிரைப் பந்தயத்திடலில் இருப்பதாகவே உணர்கின்ருேம். இவர் ஒரு கம்பெனியில் வாரமொன்றுக்கு இரண்டுமணி நேரந்தான் பேசுகிருர். இவருக்கென்ன சம்பளம் தெரியுமா? நம் நாட்டில் சாதாரணமாக சம்பளம் என்ன? மேல் வரும்படி என்ன? என்று கேட்கிருேம். மேல் நாட்டில் 'சம்பளம்' என்ன என்று கேட்பதே மரியாதைக் குறைவு. என்ருலும் இவருடைய சம்பளத்தை உங்களுக்கு ரகசியமாகச் சொல்கின்றேன். மணி ஒன்றுக்கு ஐந்நூற்று ஐம்பது ரூபாய்தான்!

காலச் சக்கரம் (March of Time) என்பது செய்திப் படங்களிலே மாதப் பத்திரிகை போன்றது. மாதந்தோறும் சுமார் 1000 அடி வெளியிடுகிருர்கள். இது மூன்று பிரிவுகள் கொண்டது. வெளிநாட்டு அரசியல் நிலை. உள்நாட்டுப் பிரச்னை, மனிதவர்க்கத்துக்குப் பொதுவான ஒரு விஷயம் ஆக மூன்று கொண்டது. உலகத்திலே சுமார் 10,700 தியேட்டர்களில் காட்டப்படும் படம் இது ஒன்றுதான்.

செய்திப் படங்களையும் சிறு படங்களையும் காண்பிப்பதற்கென்றே அமெரிக்காவில் செய்திப் படத் தியேட்டர்கள் நிறைய இருக்கின்றன. காலை பதினெரு மணி முதல் இரவு பதினெரு மணிவரை தொடர்ச்சியாகக் காண்பிப்பார்கள். ஒரே வகுப்பு; ஒரே கட்டணம். மொத்த புரோகிராம் ஒரு மணி நேரந்தான். பெரிய ரயில்வே ஸ்டேஷன்களிலே இம்மாதிரி தியேட்டர்கள் அமைத்துள்ளார்கள். நியூயார்க் சென்ட்ரல் ஸ்டேஷனில் உள்ள தியேட்டரில்,

செவிடர்களுக்குக் காதுக் கருவி ஒன்றும் கொடுக்கிறார்கள்.

இங்கிலாந்தில் ஆறு செய்திப் படக்கம்பெனிகளிருக்கின்றன. செய்திப் படத் தியேட்டர்கள் உலகில் எந்த நாட்டையும்விட இங்கிலாந்தில்தான் அதிகம். லண்டனிலிருந்து கிளாஸ்கோ, எடின்பர்க் முதலிய இடங்களுக்கு இரவு நேரங்களில் செல்லும் ரயில்களில் செய்திப்படத் தியேட்டர்கள் அமைத்துள்ளார்கள். ஒரு ஷில்லிங் கட்டணம் வசூலிக்கின்றார்கள். நாஷனல் நியூஸ் கம்பெனியார், பத்திரிகைகளில் கார்ட்டூன் போடுவதுபோல, வாரத்திற்கு ஒரு செய்தியைக் கார்ட்டூன் மூலம் காட்டுகின்றனர்.

அயர்லாந்திலே ஒரு ஸ்டுடியோ கூடக் கிடையாது. அங்கு நடக்கும் செய்திகளையும் படம் பிடித்து ஐரிஷ் மூவிடோன் நியூஸ் என்ற பெயரால் பிரிட்டிஷ் மூவிடோன் கம்பெனியார் தயாரிக்கின்றனர்.

பிரான்ஸில் ஐந்து செய்திப் படங்கள் உள்ளன. சினியாக் என்ற பெயருடன் ஐரோப்பாவில் ஆறு நாடுகளில் செய்திப் படத் தியேட்டர்களை ஒரே கம்பெனியார் நடத்தி வருகின்றனர். பெரும்பாலான பிரெஞ்சு செய்திப் படங்கள்தான் பெல்ஜியத்தில் காட்டப்படுகின்றன.

ஹாலந்தில் மூன்று செய்திப் படங்கள். ஜெர்மனியிலும் அம்மாதிரியே. ஜெர்மனியில் செய்திப் படங்களையும், கல்வியபிவிருத்தி சம்பந்தமான படங்களையும் கட்டாயமாகக் காண்பிக்கும்படி அரசாங்கத்

தார் சட்டம் செய்திருக்கின்றனர். ஜெர்மனியர்கள் நேரடியான பிரசாரத்தைத்தான் விரும்புகிறார்கள்.

ஒன்றரை கோடி மக்களுள்ள செக்கோஸ்லோவாகியா நாட்டில் நான்கு காமிராக்காரர்களோடு அரசாங்கத்தார் ஒரு கம்பெனி தொடங்கியுள்ளார்கள். பிராஹா இந் நாட்டின் தலைநகர். இந் நகரில் எல்லா சினிமாக்களும் பூமிக்குக் கீழேதான் இருக்கின்றன. செய்திப் படத்திற்குத் தனி தியேட்டர்களும் இருக்கின்றன. இந் நாட்டில் 30 லட்சம் பேர் ஜெர்மனியர்கள். அதற்காக செக் ஜெர்மன் ஆகிய இரு பாஷைகளிலும் இப் படங்கள் வியாக்யானம் செய்யப்படுகின்றன.

ஆஸ்திரியாவிலே சுமார் 600 தியேட்டர்கள்தான். பல தியேட்டர்களில் வாரம் இருமுறை அல்லது ஒரு முறைதான் படம் காண்பிக்கப்படும். ஆனால் இந் நாட்டிலே வாரம் இருமுறை செய்திப் படங்கள் வெளியிடப்படுகின்றன.

'லூசு' என்பது இத்தாலியிலுள்ள பிரபலமான செய்திப்பட ஸ்தாபனம். இவர்கள் இரண்டு விதப் படங்கள் வெளியிடுகின்றனர். ஒன்று இத்தாலியில் நடைபெறும் நிகழ்ச்சிகள். மற்றொன்று அபிசீனியாவை இவர்கள் சீர்திருத்தும் காட்சிகள்.

ரஷ்யாவில் செய்திப் படங்களை அரசாங்கத்தாரே செய்து நடத்துகின்றனர். ரஷ்யப் படங்களில் செய்தியைவிட பிரசாரம்தான் அதிகம். அன்றியும் ரஷ்யச் செய்திப் படங்கள் டாக்குமெண்டரி படங்களாக இருக்கின்றன.

ஆறு கோடி மக்களுள்ள ஜப்பானிலே இரண்டு பெரிய செய்திப் படங்கள் உள்ளன. அசாஹி, மைனிச்சி என்ற பிரபல பத்திரிகைகள் அரசாங்க உதவியோடு இந்த ஸ்தாபனங்களை நடத்துகின்றன. சென்ற முறை ஜெர்மனியில் ஒலிம்பிக் விளையாட்டுகள் நடைபெற்ற பொழுது, அப்படங்களை யெல்லாம் ஜப்பானியச் செய்திப் படக் கம்பெனிகள் ஆகாய விமானத்தில் கொண்டு வந்தன. அந்த நாளிலே செய்திப் படத் தியேட்டர்களில் நிற்பதற்குக் கூட இடங் கிடைக்காது.

செய்திப் படங்கட்கு அமெரிக்காவில்தான் பூரண சுதந்திரம் உண்டு. உலகில் எல்லா நாடுகளும் செய்திப் படங்களைத் தணிக்கை செய்கின்றன. ஆனால் அமெரிக்கா மட்டும் தணிக்கை செய்வதில்லை.

வெளி நாடுகளிலே இந்தியாவுக்கு விரோதமாக, செய்திப் படங்கள் மூலமாகவும் மற்றப் படங்கள் மூலமாகவும் பிரசாரம் செய்யப்படுகிறது. இப் பிரசாரம் மறைமுகமாகவும் திறமையாகவும் நடைபெறுகிறது. ஒரு முறை நியூ யார்க்கில் ஆயிரம் செய்திப் படங்களை ஆராய்ச்சி செய்தபொழுது இந்தியாவைப் பற்றி மூன்றே மூன்று செய்திகள்தான் காட்டப்பட்டன. ஒன்று, யானைகள் சிலோனில் வேலை செய்வது; இரண்டாவது, இந்தியாவிலிருந்து சில குரங்குகள், நியூ யார்க் துறைமுகத்தில் இறக்குமதியாவது; மூன்ருவது, ஹைதராபாத் நிஜாம். யானை, குரங்கு, ராஜா இம் மூன்றுந் தவிர இந்தியாவில் வேறொன்று மில்லையா?

சிறிய நாடான இங்கிலாந்தில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலுள்ள செய்திகளைக் காண்பிக்கும் படக் கம்பெனிகள் ஆறு. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஜனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கு இந்தியாவில். அப்படி யிருந்தும் நூற்றுக்கு இரண்டு விகிதம்கூட இந்தியச் செய்திகள் காட்டப்படுவதே இல்லை. இந்தியாவில் செய்திகளே இல்லை யென்று அர்த்தமா? அல்லது இந்தியச் செய்திகள் படம் பிடிக்கப்படுவதற்குத் தகுதியற்றனவா?

வெளிநாட்டில் நடைபெறும் எதிர்ப் பிரசாரங்களைத் தடுக்கவும், நமது உண்மை நிலையை உலகுக்கு உணர்த்தவும் செய்திப் படங்கள் எவ்வளவு பயனுள்ளவை? நமது நாட்டின் அடிமை வாழ்க்கையில், பயங்கரமான ஏழ்மையில், நூற்றுக்குச் சுமார் தொண்ணூறு பேர் படிக்காத நிலையில், ஒழுங்காகத் தயாரிக்கப்படும் **செய்திப் படங்கள்** எத்தகைய அற்புதங்களைச் செய்ய முடியும், தெரியுமா?

MARAIMALAI ADIGAL LIBRARY
சென்னை-1

மகாத்மா காந்தி படம்

1937-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் இரண்டாந் தேதி, நியூயார்க்கிலிருந்து டப்ளினுக்கு (அயர்லாந்து) "சமரியா" என்னும் கப்பலில் பிரயாணம் செய்துகொண்டிருந்தேன். அந்த தினம் இந்தியாவிலுள்ள சிறு குழந்தைக்கும் தெரிந்த புனித தினம் - மகாத்மாவின் பிறந்த நாள்.

நியூயார்க்கில் காந்தி ஜெயந்தியைக் கொண்டாட, இந்தியாவின் நண்பர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். ஆனால், அதில் கலந்து கொள்ளத் தக்கவாறு தாமதித்து வரக்கூடிய நிலையில் நான் அன்று இல்லை. கப்பலில் அதை எண்ணி நான் வருந்திக்கொண்டிருக்கும் போது ஒரு எண்ணம் உதித்தது. கடலிலேயே நான் ஏன் அதைக் கொண்டாடக் கூடாது? என்னோடு கப்பலில் இருந்த ஒரே இந்தியர், அவ்வெண்ணத்தை ஆமோதித்தவுடன் அதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினேன்.

கூட இருந்த சில அமெரிக்க நண்பர்கள், அதில் கலந்துகொள்ள முன் வந்தனர். இந்திய உணவுடன் அச்சிறு கொண்டாட்டம் வெற்றிகரமாகவும், சந்தோஷமாகவும் நடந்தது. விருந்து முடிந்ததும் கப்பலின்மேல் தளத்திற்கு வந்தேன். அச்சம்பவத்திற்குக் காரணமாக இருந்த அந்த ஆத்மாவுக்கு நம் தேசம் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறது என்பதை

எண்ணி, உருகிக்கொண்டிருந்த போதுதான், இப் படத்தைப் பற்றிய எண்ணம் முதன் முதலாக எனக்கு உதித்தது. மகாத்மாவின் வாழ்க்கையை, அவருடைய வாழ்க்கையின் அனுபவங்களை, ஒரு உண்மையான சரித்திரப் படமாக ஏன் தயாரிக்க லாகாது என்ற எண்ணம் இரவு முழுவதும் என்னை ஆட்கொண்டது.

காலையில் எழுந்தவுடன், இந்திய நண்பரிடம் ஓடி, என் எண்ணத்தைத் தெரிவித்தேன். அவர் சிரித்தார். ஆனால் என் ஆர்வத்தை உணர்ந்து அந்தத் திட்டத்தைப்பற்றி விவாதிக்கச் சம்மதித்தார். நீண்ட நேரம் விவாதித்து ஒரு திட்டம் தயாரித்தோம். அச் சிறு காகிதம்தான் காந்தி சரித்திரப் படத்தின் மூலா தாரம்.

அத்திட்டம் ஒரு உருவெடுத்ததும், என் நண்ப ருக்குச் சிறிது நம்பிக்கை ஏற்பட்டது. எண்ணம் நல் லதுதான் என்று ஒப்புக்கொண்டார். காந்திஜீயைப் பற்றி ஒரு சிறு படம் தயாரிப்பது சாத்யமாகலாம். ஆனால், ஒரு முழு நீளப்படம் தயாரிக்க வேண்டுமே? அதற்கு வேண்டிய விஷயங்களை ஒருவர் சேகரிக்க வேண்டுமே? சாத்யமா? என்றார்?

நான் சொன்னேன் :—“ உலக முழுமையும் அதற் காக அலைவேன். ஒவ்வொரு செய்திப் படக்கம்பெனிக் கும் செல்வேன். உலகத்தின் பல்வேறு பாகங்களி லுள்ள படக் குவியல்களில் தேடுவேன், சினிமாப் பட லைப்ரரிகள் ஒன்று தவறாமல் பார்ப்பேன். எப் படியும் சேகரிப்பேன்.”

ஆனால், அவர் நம்பிக்கை கொள்ளவில்லை.

ஐரோப்பா முழுதும் அலைந்தேன். திரும்பியதும், ஹரிபுரா காங்கிரஸுக்குச் சென்றேன். இந்தியாவில் உள்ள பல்வேறு ஸ்டூடியோக்களைப் பார்வையிட்டேன். அநேக பட முதலாளிகளுடன் என் திட்டம்பற்றி விவரித்தேன். பலனில்லை.

இதன் நடுவில் இந்தியாவின் தலை சிறந்த ஸ்டூடியோ ஒன்றில், தாங்கள் ஆரம்பிக்க விருந்த செய்திப்பட இலாகாவிற்கு என்னைத் தலைவராக அழைத்தனர். அதை எண்ணிச் சிலகாலம் தாமதித்தேன். ஆனால் அவர்கள் செய்திப்படம் ஆரம்பிக்கும் எண்ணத்தைக் கைவிட்டதும், என் பழைய வேலையைத் தொடங்கினேன்.

சென்னையிலுள்ள பல முதலாளிகள் என் திட்டத்தைப் பார்த்து நகைத்தனர். சிலரால் அதனை அறிந்து கொள்ளக்கூட முடியவில்லை. ஒரு பிரபல பிலிம் கம்பெனி மானேஜர், என் எதிரிலேயே தன் முதலாளியிடம், "வாழ்க்கைச் சித்திரப்படம் (டாகுமெண்டரி பிலிம்) இலவசமாக காண்பித்தால் கூட ஜனங்கள் பார்க்க வரமாட்டார்கள்" என்று கூறினார்.

பலர் நான் வெறும் மனக்கோட்டைகட்டும் இளைஞன் என்றும், வெளிநாட்டிலிருந்து திரும்பி இருப்பதால், சாத்யமாகாத எண்ணங்களை வைத்துக் கொண்டு குழம்பிக்கொண் டிருப்பதாயும் எண்ணினர். இதன் நடுவில் சில முதலாளிகள், தங்கள் படத்திற்கு டைரக்டராக வரும்படி கொழுத்த சம்ப

ளத்தை ஆசை காட்டினர். தொகை ரொம்ப வசீகர மாக இருந்தது. ஆனால் நான் எடுத்த காரியத்தை விடுவதில்லை என்று சங்கற்பம் செய்து கொண் டேன்.

அதன் பிறகுதான் 'டாக்குமெண்டரி பிலிம்ஸ்' ஸ்தாபிக்கப்பட்டது. அக்கம்பெனி உருவாக ஏறக் குறைய ஒரு வருஷம் சென்றது. அதற்கிடையில் தமிழ்ப் பட முதலாளிகளைப்பற்றி அறிய நல்ல அனுபவமும் கிடைத்தது, நான் என் எண்ணத்தில் பைத்தியம் பிடித்தவன்போல் இருந்தேன்.

இந்தியாவைச் சுற்றிப் பல தடவைகள் அலேந் தேன். உலகத்தில் ஏறக்குறைய பாதிக்கு மேல் வேகமான கப்பல்களிலும் ஆகாய விமானங்களிலும் ஐந்து மாதங்கள் சுற்றினேன்.

பழைய படங்களைச் சேகரிப்பது விசேஷமாக இந்தியாவில் மிகவும் ரசமாக இருந்தது. ஸ்டுடி யோக்களுக்கு சென்று பழைய படங்களைப்பற்றி விசாரிக்கும்போது அநேகர் என்னை மிகுந்த ஆச்சரி யத்துடன் உற்று நோக்கினர். இந்தக் குப்பைகளை என்ன செய்யப்போகிருய் என்று கேட்டனர். ஆனால் நான் மிகவும் அபூர்வமான சிலவற்றை அந்தக் குப்பை களிலிருந்துதான் தேடி எடுத்தேன்!

முதல் ஆண்டு முழுவதும் தேடிச் சேகரித்த படங் கள், முழு நீளப்படமாகச் செய்வதற்குப் போதுமான தாக இல்லை. பிறகு ஐரோப்பாவிற்கு பயண மானேன்.

ஐக்ய அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் முப்பதுக்கு மேற்பட்ட செய்திப் படக் கம்பெனிகட்குச் சென்றேன். கீழ் நாடுகளிலும் மேல் நாடுகளிலும் காந்திஜீயின் வாழ்க்கைக்கு உபயோகமான, எல்லாப் படங்களேயும் சேகரித்தேன். வெளிநாடுகளில் படங்கள் சேகரிப்பது இந்தியாவைவிட சுலபமாகவும் சிக்கனமாகவும் இருந்தது.

பெரும்பாலான நாடுகளில் செய்திப் படக் கம்பெனிகளும், பட லைப்ரரிகளும் இருக்கின்றன. அவர்கள் சில நிமிஷங்களில் தங்கள் பட ஜாப்தாவைப் பார்த்து நமக்குத் தேவையானவை, உண்டு, இல்லை என்று சொல்லி விடுகின்றனர். அநேக இடங்களில் என் வேலே, நான் சென்ற 24-மணிக்குள் முடிந்து விட்டது.

லண்டனுக்குச் சென்ற பொழுது மகாத்மாவின் நண்பர் ஸ்ரீ போலக்கை பார்க்கச் சென்றேன். என்னுடைய திட்டத்தை அவருக்கு விளக்கிக் கூறிய பொழுது, அவர் சாவதானமாக ஒரு பழைய தகர டப்பாவை எடுத்து 200 அடி கொண்ட மிகப் பழைய சினிமாப் படம் ஒன்றின் 'பாசிட்டிவ்' காப்பியைக் காண்பித்தார்! அது ஒரு சரித்திர பிரசித்தி பெற்ற படம் என்றும், சென்ற 27 வருஷங்களாய் அதனைத் தாம் பாதுகாத்து வருவதாயும் அவர் சொன்னார். அதற்கு ஒரு காப்பி எடுத்துத் திரையில் போட்டுப் பார்த்தபொழுது "இது காலஞ் சென்ற அருந்தலைவர் கோபாலகிருஷ்ண கோகலே தென்னாப்பிரிக்கா விஜயம் செய்தபோது எடுத்த படம். அதில் மகாத்மா காந்தியை ஐரோப்பிய உடையில் பார்!" என்று

ஸ்ரீ போலக் கூறினர். நமது தேசத்தின் அருமையான சரித்திரச் சின்னங்களில் இது ஒன்று என்று துணிந்து கூறலாம். 1912-ஆம் வருஷத்தில், முன்னேற்ற மதிக மடையாத ஆப்ரிக்கா கண்டத்தில், அதுவும் காந்திஜீ யையும் கோகலேயையும் சினிமாப்பட மெடுத்திருப் பார்கள் என்று யாராவது எதிர்பார்த்திருக்க முடி யுமா? அதைவிட பெரிய பாக்கியம் ஸ்ரீ போலக் அதைக் காப்பாற்றி வைத்திருந்து அளித்ததுதான். காந்திஜீயின் தென்னப்பிரிக்கா போராட்டத்தில் அவருடன் தோளோடு தோள் கொடுத்து நின்ற அதே ஸ்ரீ போலக்தான் இவர். இவ்வருந் தனத்தை காப்பாற்றி இந்தியருக்கு அளித்த ஸ்ரீ போலக்குக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறோம்.

பொதுவாக இங்கிலாந்தைப் பொறுத்த வரை யில், பிரிட்டிஷ் செய்திப்பட கம்பெனிகளிடமிருந்து எந்த விதமான ஒத்துழைப்பையும் நான் பெற முடிய வில்லை. ஒரு செய்திப் படக்கம்பெனியில் ஒரு அடிக்கு ஒரு பவுன் கேட்டார்கள்! அந்த அதிக விலைக்கு நான் வாங்கத் தயாராய் இருந்தபொழுது அந்தப் படத்தை விற்க மறுத்து விட்டனர். காந்திஜீயின் லண்டன் விஜயம் அரசியல் சம்பந்தமான படமென் றும், அப்படத்தை நான் இந்தியாவுக்கு எடுத்துச் சென்று, பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு விரோதமாகக் காட்டக்கூடும் என்றும், எனவே எவ்வளவு விலை கொடுத்தாலும், அப்படங்களை எனக்கு விற்க முடியா தென்றும் கூறிவிட்டனர். அந்தப் படங்களில் சில பாகங்களை வெளிநாடுகளில் நான் அலைந்து வாங்க வேண்டியதாயிற்று.

பிரான்ஸில் உள்ள படக்கம்பெனிகள் முழு மன துடன் உதவி செய்தன. அவைகளுள் விசேஷமாக "எக்லார் டிராஸ்" என்ற செய்திப் படக்கம்பெனி யின் ஒத்துழைப்பு எனக்கு மிகவும் பலனுள்ளதாக யிருந்தது. எனது பிரயாணத்தில் மிகவும் சந்தோஷ மான நாட்கள் உலகப் பிரசித்தி பெற்ற எழுத்தாள ரான ஸ்ரீ ரொமெய்ன் ரோலந்துடன் தங்கிய நாட்க ளாகும். பிரான்ஸில் அவர் பிறந்த விடமான வெஸி லேயில் அவர் வருஷத்தில் 6 மாதம் கழிக்கிறார். ரொமெய்ன் ரோலந்திற்கு ஆங்கிலம் தெரியாது. ஆத லால் அவர் மனைவியார் மூலமாகவேதான் பேச முடிந்தது.

மகாத்மாஜீயின் சரித்திரத்தை முதன் முதலாக எழுதி வெளி உலகத்துக்கு அறிவித்த பெரியவர் ஸ்ரீ ரொமெய்ன் ரோலந்துதான். சினிமாவில், தமது அபிப்பிராயத்தைச் சொல்ல அவர் முதலில் மறுத்து விட்டார். அவர் மறுத்த காரணம், சினிமாவுக்குத் தகுந்த முகவெட்டு தமக்கு இல்லை என்று அவர் எண் ணியதே யாகும்! கடைசியாக அவர் மனைவியின் உதவியைக் கொண்டு மிகுந்த சிரமத்தின் பேரில் அவர் சம்மதத்தைப் பெற்றேன். உடனே பிரான் ஸில் பிரபல செய்திப் படக் காமிராக்காரரான சார் லஸ் மேத்தானுக்கு டெலிபோன் செய்து அவரை வர வழைத்தேன். மறுநாள் காலை மகாத்மாஜீயைப்பற்றி ஸ்ரீ ரொமெய்ன் ரோலந்தின் அபிப்பிராயத்தைப் படத்தில் பிடித்தாகி விட்டது.

பல ஐரோப்பிய நாடுகளில் காந்திஜீ பற்றிய செய்திப் படங்களைத் தேடி முடிந்தவுடன், அமெரிக்

காவுக்கு "பில்ஸுத்ஸ்கி" என்ற போலிஷ் கப்பலில் பிரயாணமானேன். இந்த போலந்துக் கப்பல்தான் யுத்த ஆரம்பத்தில் விரோதிகளால் மூழ்கடிக்கப் பட்டது.

நியூ யார்க்கில், எனது பழைய நண்பர்கள் மலர்ந்த முகத்துடன் வரவேற்றனர். அந்த நகரத் துக்கு எனது இரண்டாவது விஜயம் மிகச் சுருக்க மாகவே இருந்தது. பல செய்திப் படக் கம்பெனிகள் என்னுடன் ஒத்துழைக்க முன் வந்தன. நியூ யார்க் பப்ளிக் லைப்ரரியைச் சேர்ந்த ஸ்ரீ பிரிஹாவர், காந்திஜீ யைப்பற்றிய பல்வேறு ஐரோப்பிய பாஷைகளி லுள்ள சுமார் 200 புஸ்தகங்களைச் சேகரிக்க மிகுந்த சிரமம் எடுத்துக்கொண்டார். ஒரு சிறந்த அமெரிக்க காமிராக்காரரைக் கொண்டு இந்த அருமையான பொக்கிஷத்தைப் படம் பிடித்துக் கொண்டேன். வாஷிங்டனிலுள்ள காங்கிரஸ் புஸ்தகசாலையிலும், காந்திஜீயைப்பற்றி உள்ள ஏராளமான புஸ்தகங் களைப் படம் பிடிக்க உதவி செய்தனர்.

அமெரிக்காவை விட்டு நான் விரைவில் புறப்பட வேண்டியதாயிற்று. சிறிதுகூட எனக்குச் சாவகாசம் இல்லாததால், வாஷிங்டன் ரேடியோ நிலையத்தார், "மகாத்மா காந்தி" சினிமா படத்தைப்பற்றி என்னை பேசுமாறு கேட்டுக் கொண்டதைக் கூட நான் மறுக்க வேண்டியதாயிற்று. அபூர்வமான உலக பொருட் காட்சியைக் கூட 7 மணி நேரந்தான் பார்க்க அவகாச மிருந்தது.

அமெரிக்காவிலிருந்து "பிரிமென்" என்ற பிரம் மாண்டமான ஜெர்மன் கப்பல் என்னை இங்கிலாந்தில்

சவுத்தாம்ப்டனில் கொண்டுவந்து சேர்த்தது. அடுத்த வேலை தென் ஆப்பிரிக்காவில். ஆனால் இங்கிலாந்தை விட்டு தென் ஆப்பிரிக்காவிற்குப் புறப்படுவது மிகவும் சிரமசாத்தியமான காரியமாயிற்று. இங்கிலாந்தை விட்டு தென் ஆப்பிரிக்காவிற்குப் புறப்படும் ஒவ்வொரு கப்பலிலும் இந்தியருக்கென்றால் இடமில்லாமலிருந்தது! "இடமே யில்லை" என்று சொல்லப்பட்ட ஒரு கப்பலில் மிகுந்த சிரமத்தின் பேரில் இடம் சம்பாதித்தேன். ஆனால் அக் கப்பலில் நான் கண்ட காட்சி ஆச்சரியத்தை அளித்தது! மொத்தம் அக் கப்பலிலேயே நாங்கள் 61 பிரயாணிகள்தான் இருந்தோம். "விண்ட்சர் காசில்" என்ற அந்தக் கப்பல் 20,000 டன் உள்ள பெரிய கப்பல். அக் கப்பலில் உள்ள சாப்பிடுமிடத்தில் ஒரே சமயத்தில் 200 பேர் சாப்பிடலாம். ஆனால் நான் மட்டும் தனியாக உட்கார வைக்கப்பட்டேன். மற்ற 60 பிரயாணிகளும் வேறு பாகத்தில் உட்கார்ந்து கொண்டனர். அந்தத் தனித்த இடம் எனக்கு கௌரவம் அல்ல. அது ஒரு அவமதிப்பு!

ஓரிரு நாட்களல்ல, $13\frac{1}{2}$ நாட்கள் இத்தகைய அவமதிப்புகளுக்கு நான் ஆளாக வேண்டியதாயிற்று. கடைசியாக கேப் டவுனை அடைந்தும்கூட, இந்த அவமதிப்புகள் என்னை விடவில்லை. அங்குள்ள ரயில்வே அதிகாரிகள் ரயில் வண்டியில் தனித்த இடந் தான் அளிக்க முடியுமென்றும் அங்கேயே நான் உணவை உட்கொள்ள வேண்டுமென்றும் கூறினர்! கேப் டவுனில் ஆகாய விமான நிலையத்திற்கு டெலிபோன் செய்தேன். அதிர்ஷ்ட வசமாக அரை மணி நேரத்தில் புறப்பட இருக்கும் ஒரு ஆகாய

விமானத்தில் இடம் காலி யிருப்பதாக அறிவித்தார் கள். விரைந்து சென்று அதில் ஏறிக் கொண்டேன். கேப் டவுனி லிருந்து 1200 மைல்கள் தூரமுள்ள டர்பன் நகரைச் சுமார் 7 மணிநேரத்தில் அடைந்தேன்.

தென் ஆப்பிரிக்கா, நிறத் திமிர் நிறைந்த நாடு. இன்றுகூட டர்பன் நகரில் உள்ள சில வீதிகளில் இந்தியர்கள் நடந்து செல்வதற்கு அனுமதிக்கப்படுவ தில்லை. ட்ராம், பஸ்களிலும் ஐரோப்பியர் அல்லாத வர்களுக்காக கடைசி மூன்று ஆசனங்கள் ஒதுக்கப் பட்டிருக்கின்றன. சில பஸ்களில் இந்தியர்களையும், நீக்ரோக்களையும் ஆடு மாடுகளைப் போல் அடைக்கி றார்கள்! பாங்குகளில் இவர்களுக்கென தனி ஜன்னல் கள்! தனி தபால் ஆபீஸ்களும் இருக்கின்றன! அநேக சினிமாக் கொட்டகைகளில், ஹோட்டல்களில், காபி சாப்பிடுகிற இடங்களில், இந்தியர்கள் அனுமதிக்கப் படுவதில்லை. ஜோகன்னஸ்பர்க் நகரில் உள்ள ஒரு சிறு கடைக்குச் சென்று, நான் சோடா கேட்டபொழுது, அங்குள்ள பெண் "புட்டியில் தருவதற்கு ஒன்று மில்லை?" என்று சொன்னாள்! இந்த நாட்டில்தான் மகாத்மா காந்தி இருபது வருஷ காலத்திற்கு மேலா கத் தங்கி, இவ்வித அநியாயங்களை ஒழிக்க அநேக போராட்டங்களை நடத்தினார்.

ஆனாலும் தென் ஆப்பிரிக்காவிலும் இன்பகர மான அனுபவங்க ளில்லாமலில்லை. காந்தி என்பது ஒரு மந்திரச் சொல்லாக விளங்கிற்று. அதுதான் உண்மை யான அநுமதிச் சீட்டு! 'காந்திஜீ ஆரம்பித்த பீனிக்ஸ் குடியேற்றம் இன்னுமிருக்கிறது. காந்திஜீ யுடன் தோளோடு தோள் நின்று உழைத்த பல ஊழி

யர்களையும், சகபாடிகளையும் சந்தித்தேன். முதல் சத்யாக்ரகப் போராட்டத்தைப்பற்றி அவர்கள் சொல்லிய அருமையான சம்பவங்கள் என் மனதை விட்டு ஒரு நாளும் அகலாது.

ஸ்ரீ காலன்பாக் என்ற ஐரோப்பிய சிற்பி, காந்திஜீயின் தோழர். ஜோகன்னஸ்பர்க்கில் நிரந்தரமாக வசிக்கும் அவர் டால்ஸ்டாய் பண்ணை போன்ற தூரமான இடங்களுக்கு காமிராவைத் தாமே தோளில் தூக்கிக்கொண்டு வந்தார்! காந்திஜீயிடம் அவர் கொண்டிருந்த அன்பு எத்தகையது!

நான் ஜோகன்னஸ்பர்க்கி லிருந்த போது யுத்தம் தொடங்கி விட்டது. கப்பல் கம்பெனிகள் எல்லாம் "இடமில்லை" என்று கையை விரித்தன. ஒரு கம்பெனியார் இந்தியர்களை முதலாவது வகுப்பில் அனுமதிப்பதில்லை என்றுகூடக் கூறினார். உடனே என்னுடைய உரிமையைப் பற்றிப் போராட ஆரம்பித்தேன். இந்திய அரசாங்கத்தின் ஏஜண்டு ஜெனரல், வர்த்தக சங்கம் இவர்களின் உதவியைக் கொண்டு, நான் வெற்றி பெற்றேன். தாய்நாடு திரும்ப டிக்கட் கிடைத்தது.

இந்தியாவிற்கு வந்த பின்னரும் தேசத்தைச் சுற்றி மீண்டும் படங்களுக்காக அலைய ஆரம்பித்தேன். டாகுமெண்டரி பிலிம்ஸ் காமிராக்காரர்கள் பல்வேறு சமயங்களில் மாதக் கணக்காக வார்தாவில் காத்துக்கொண் டிருந்தனர். மகாத்மா காந்தியைப் படம் பிடிப்பது மிகவும் கஷ்டமான காரியம். காமிராவுக்காக அவர் சிறிதுகூட நிற்பதில்லை. சாதாரண

மாக அவர் மிகவும் வேகமாக நடப்பவர். அதையும் விட அவரைச் சுற்றிலும் எப்பொழுது பார்த்தாலும் ஜனங்கள் நின்று கொண்டு, படத்தில் தாங்களும் விழவேண்டுமென்று தலையை நீட்டுகின்றனர். காந்திஜீயின் வீட்டுக்கு அநேக காமிராக்காரர்கள் அனுமதிக்கப் படுவதில்லை. இத்தகைய மகத்தான கஷ்டங்களுக் கிடையே காந்திஜீயின் வாழ்க்கையில் அருமையான சில காட்சிகள் எடுக்கப்பட்டிருக் கின்றன.

மொத்தம் எடுக்கப்பட்ட சுமார் 50,000 அடி நீளமுள்ள படங்களிலிருந்து சுமார் 12,000 அடி நீளமுள்ள ஒரு தொடர்ச்சியான படம் தயாரித்து இருக்கிறோம். படத்தை இத்தகைய நீளத்திற்குக் கொண்டுவர சுமார் 3 வருஷங்கள் ஆயிற்று. இவை களைச் சேகரிக்க நான்கு கண்டங்களில் ஏறக்குறைய லக்ஷம் மைல் பிரயாணம் செய்திருக்கிறேன். உலகம் முழுமையிலும் கடந்த 30 வருஷங்களாக சற்றேறக் குறைய 100 காமிராக்காரர்கள் எடுத்த படங்களின் சேகரிப்பு இது. செய்திப்பட சம்பிரதாயத்தைக் கொண்டு ஒரு தனிப்பட்ட மனிதரின் வாழ்க்கையை அவரது வாழ்க்கையின் சம்பவங்கள் மூலமாக சித்தி ரிக்கும் ஒரு முழு நீளமுள்ள சரித்திரப் படம் முதன் முதலாக தயாரிக்கப்படுவது இது தான் என்பது என் நம்பிக்கை. ஒரு மனிதரைப் பற்றிய முழு நீளப் படம் தயாரிக்க வேண்டுமென்றால் இந்தியாவில் காந்திஜீ யைத் தவிர வேறு எவரைப்பற்றி தயாரிக்க முடியும்?

[மகாத்மா காந்தி பட சரித்திரத்தில் ஸ்ரீமான்க ளான லெ. நடேசன், மு. அழ. அழகப்ப

செட்டியார், க. சா. அ. அ. சம்பந்தம் செட்டியார், குண்டூர் நரசிம்ம ராவ், பி. வி. பதி, பி. சுப்பிரமணியம், சு. வீர. வீரப்ப செட்டியார் முதலியோர் பேர்கள் முக்கிய இடம் பெறும்.]

வெளிநாட்டில் சினிமாத் தொழில்

ஜப்பான் பூராவிலும் இரண்டே இரண்டு பெரிய ஸ்டுடியோக்கள்தான் உண்டு. ஒன்று டோக்கியோவிலுள்ள பி. ஸி. எல். ஸ்டுடியோ; மற்ருென்று, ஆப்ஞ. காமிராமான்களில் நூற்றுக்குப் பத்துப் பேர் அமெரிக்காவில் பயிற்சி பெற்றவர்கள். சராசரி ஒரு பிலிமின் நீளம் 10,000 அடி. ஒரு நல்ல படம் தயாரிக்க, 50,000 என், அதாவது 40,000 ரூபாய்க்கு மேல் செலவாகாது. பொதுவாக ஜப்பானியப் படங்கள் நன்ருயிருக்கின்றன. இந்தியாவைப்போல், 'நட்சத்'திரங்களுக்கு மிதமிஞ்சிய சம்பளம் ஜப்பானில் கிடையாது.

புராணம், சமூகம் இருவிதப் படங்களையும் ஜப்பானிய ஸ்டுடியோக்கள் தயாரிக்கின்றன. ஜப்பானிய 'நட்சத்திர'ங்கள் மிக்க சிரமப்பட்டு உழைக்கிருர்கள்; நாள் ஒன்றுக்கு 16 மணி நேரங்கூடச் சில சமயம் உழைக்கிருர்கள்.

பெரும்பாலான ஜப்பானிய சினிமாத் தியேட்டர்களில் ஒரே ஒரு வகுப்புத்தான் உண்டு. மிக்கச் சில தியேட்டர்களில் மட்டும் இரண்டு வகுப்புக்கள் இருக்கின்றன. பொதுவாகத் தொடர்ச்சியாய்ப் படங்கள் காட்டுகிருர்கள். ஒவ்வொரு புரோகிராமிலும் இரண்டு படங்கள். அயல்நாட்டுப் படங்களில், அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ் இந்த நாடுகளின்

படங்களிலும் ஜனங்களுக்கு அதிகப் பிரியம் இருக்கிறது.

ஹாலிவுட்டில் ஐந்தாறு பெரிய ஸ்டுடியோக்களே தான் இருக்கின்றன. எல்லாவற்றிலும் மிகப் பெரியது மெட்ரோ கோல்ட்வின் மேயர். மற்றும் பாரமௌண்ட், ட்வொண்டியத் ஸெஞ்சரி பாக்ஸ், யுனிவர்ஸல், கொலம்பியா, வார்னர் பிரதர்ஸ் போன்றவையும் இருக்கின்றன.

இருபுறமும் வரிசை வரிசையாய் மரங்கள் நிற்கும் அழகிய அகன்ற தெருக்கள் வழியே நடக்கும் ஒருவர், கிளார்க் கேபிள், நார்மா ஷியரர், ஷர்லி டெம்பிள், மிக்கி ரூனி போன்ற நட்சத்திரங்களைச் சந்திக்கலாம். நட்சத்திரங்களுக்கு நல்ல சமபளம் கிடைக்கிறது. ஐக்கிய அமெரிக்கக் குடியரசுத் தலைவரை விட அதிகச் சம்பளமும் சில நட்சத்திரங்கள் பெறுகிறார்கள்.

சராசரி ஓர் அமெரிக்கப் படம் 75 முதல் 90 நிமிஷம் வரை ஓடுகிறது. எனினும், இதற்குப் பல விலக்குகள் உண்டு. சாதாரணமான ஓர் அமெரிக்கப் படத்தைத் தயாரிக்க, 50,000 டாலர் செலவாகிறது. ஆனால், 'ஸூப்பர் பிக்சர்ஸ்' என்ற மிக உயர்தரப் படங்களைத் தயாரிக்க, பல லட்சம் டாலர்கூடச் செலவழிக்கிறார்கள்.

பிலிம் தொழிலின் சகல அம்சங்களிலும் அமெரிக்கர் மிகச் சிறப்பான முறையில் வேலை செய்கிறார்கள். ஒவ்வொரு ஸ்டுடியோவுக்கும், ஊர் சுற்றும் சில ஏஜண்டுகள் இருக்கிறார்கள். புதிய 'நட்சத்

திரங்'களைக் கண்டு பிடிப்பது இவர்களின் வேலை. முதல் காட்சியைப் படம் பிடிக்க ஆரம்பிக்குமுன், கதை, படம் எடுக்கும் குறிப்புகள் அடங்கிய 'ஸ்க்ரிப்ட்' முதலிய அனைத்தும் தயாரா யிருக்கும். ஒரு படத்தை எடுக்க, நான்கு முதல் பத்து வாரங்கள் தான் பிடிக்கும்.

காமிராமான்களில் இரண்டு வகை. ஒளி நிபுணர்கள் ஒரு வகை; படம் பிடிக்கும் 'ஆப்பரேட்டர்கள்' மற்றொரு வகை. படம் பிடிக்கும் காமிராமான்களைப்போல் மூன்று மடங்கு அதிகச் சம்பளம் ஒளி நிபுணர்கள் பெறுகிறார்கள்.

ஒரே காட்சியை எடுக்கையில் மூன்று காமிராக்களை, பெரும்பாலான ஸ்டுடியோக்கள் உபயோகிக்கின்றன. இந்த மூன்று காமிராக்களும் வெவ்வேறான மூன்று கோணங்களில் வைக்கப்படுகின்றன; வெவ்வேறான மூன்று கோணங்களில், படத்தை அவைகள் எடுக்கின்றன. அந்த மூன்றில் எது மிகச் சிறந்ததா யிருக்கிறதோ, அதையே முடிவான பிலிமில் சேர்த்துக் கொள்கிறார்கள். ஹாலிவுட்டில் இப்படி மூன்று நெகடிவ்கள் எடுத்தாலும் மொத்த செலவில் நூற்றுக்குப் பத்து விகிதம்தான் வெற்று பிலிம் வாங்குவதற் கென்று பணம் ஒதுக்குகிறார்கள். நம்மவர்களுக்கோ, வெற்று பிலிமுக்கு 30 சத விகிதத்துக்கு மேல் செலவாகி விடுகிறது!

பிலிம் தொழிலின் மூன்று கிளைகளான (1) உற்பத்தி (2) விநியோகம் (3) காட்சி, இந்த மூன்றையும் ஒரே கம்பெனியே நடத்துகின்றன. அமெரிக்கர்

களின் சினிமாத் தொழில் வெற்றிக்கு இதுதான் மூல காரணம்.

ஐக்கிய அமெரிக்கா முழுவதிலும் மொத்தம் 20,000 தியேட்டர்கள் இருக்கின்றன. மெட்ரோவுக்கும் பாரமவுண்டுக்கும் மட்டும் தனித் தனி 400 தியேட்டர்களுக்கு மேல் இருக்கின்றன. பல 'தியேட்டர் சங்கிலி'கள் இருக்கின்றன. அவர்களுக் குள்ளே 'லோஸ் இன்கார்ப்பொரேட்' தான் மிகப் பெரியது. அந்த கம்பெனிக்கு 1,500 தியேட்டர்கள் இருக்கின்றன.

இங்கிலாந்து

இங்கிலாந்துக்கு வருவோமானால், ஏமாற்றந் தான் ஏற்படுகிறது. ஏதோ சில படங்களைத்தவிர, மற்ற இங்கிலீஷ் படங்களெல்லாம் மட்டமாகவே இருக்கின்றன.

இங்கிலாந்திலே பிலிம் உலக மன்னராகவுள்ள அலெக்ஸாண்டர் கோர்டா ஆங்கிலேயரல்லர்; ஹங்கேரியர். இங்கிலாந்து ஸ்டுடியோக்களில் வேலை செய்யும் காமிராமான்களில் பெரும்பாலோர் அயல் நாட்டுக்காரர்கள். 'கோட்டா' முறை என்ற ஏற்பட்டால்தான் பிரிட்டிஷ் படங்கள் காப்பாற்றப்படுகின்றன. இங்கிலாந்தில் மூன்று அமெரிக்கப் படங்கள் இறக்குமதியானால், ஒரு பிரிட்டிஷ் படத்தை அமெரிக்கா வாங்கிக் கொள்ள வேண்டும்.

உலகத்திலே வேறெந்த நகரத்தையும்விட மிக அதிகமான செய்திப் படத் தியேட்டர்கள் லண்டனில் இருக்கின்றன. லண்டனில் நடுமத்தியில் சுமார் இரு

பது செய்திப் படத் தியேட்டர்கள் இருக்கின்றன. அவைகளுக் குள்ளே டாட்லர் சினிமா என்பதற்குத் தான் ஜனங்கள் மிக அதிகமாய் போகிறார்கள். இந்தத் தியேட்டரின் மிகப் பெரிய திரையில், ஒரு சமயம் டெர்பி குதிரைப் பந்தயக் காட்சியை ஆகாசதர்சினி யில் (டெலிவிஷன்) பார்த்தேன்.

மீதி ஐரோப்பா

ஒரு காலத்தில் பிரெஞ்சுப் படங்கள் உலக மார்க் கெட்டில் பிரபலமா யிருந்தன. இப்போது அவை மட்டமாகி விட்டன. ஏனெனில், தனிப்பட்ட முத லாளிகள் பட உற்பத்தியைக் கைக்கொண்டதால், தொழில் சீரழிந்து விட்டது.

ஜெர்மனியில் உள்ள ஊபா (Ufa) என்பது உல கத்திலேயே மிகப் பெரிய ஸ்டூடியோ. அது இப் போது டாக்டர் கெப்பல்ஸின் ஆதிக்கத்தி லிருந்து வருகிறது. ஜெர்மன் சினிமா டைரக்டர்களில் மிகச் சிறந்தவர்களை யெல்லாம், பிரசாரப் படங்கள் தயா ரிக்கும்படி கட்டளை யிட்டிருக்கிறார்கள்.

பிரசாரப் படங்கள் தயாரிப்பதில், எந்த நாடும் ருஷியாவை மிஞ்ச முடியாது. ருஷியாவின் பிலிம் கலை-நுட்பங்கள், அமெரிக்க நுட்பங்களுக்கு முற்றி லும் மாறுபட்டவை. ருஷியப் படங்களில் நூற்றுக்கு நூறு பிரசாரந்தான் மலிந்திருக்கும்; ஆனால், அது மறைமுகமாகவே யிருக்கும். ஐன்ஸ்டீன், புடோவ்கின் போன்ற மேதைகள் டைரக்ட் செய்த படங்களைப் பார்க்கும் ஆனந்தத்தைப் பெற முடியாமல் தடுக்கப் பட்டிருப்பது நமது துர்ப்பாக்கியமாகும்.

ஸ்வீடனில் நல்ல வசதியுள்ள ஸ்டூடியோ ஒன்று இருக்கிறது. அதை ஆரம்பித்தவர் தீப்பெட்டி மன்னரான குருகர் தான். அதற்கு ஸ்வென்ஸ்கா பிலிம் இண்டஸ்டிரி என்று பெயர். 1913-ஆம் வருஷம் டாக்டர் தாகூர் நோபல் பரிசுபெறச் சென்றபோது எடுக்கப்பட்ட பழைய செய்திப் படம் ஒன்றை ஸ்வீடனில் நான் பார்த்தேன்.

ஜெக்கோ-ஸ்லாவாகியா, ஹங்கேரி, ஆஸ்திரியா முதலிய நாடுகளிலும் நல்ல ஸ்டூடியோக்கள் இருக்கின்றன; ஒவ்வொரு வருஷமும் சில படங்களை அவையும் தயாரிக்கின்றன.

அயர்லாந்தையும் பின்லாந்தையும் தவிர, மற்ற ஒவ்வோர் ஐரோப்பிய நாட்டிலும் ஸ்டூடியோக்கள் இருக்கின்றன.

இத்தலியில் ஐந்து அரங்கங்களுள்ள பிரம்மாண்டமான ஒரு ஸ்டூடியோவை இத்தாலிய சர்க்கார் கட்டியிருக்கிறது. இந்த அரங்கங்களை, தனிப்பட்ட சினிமா உற்பத்தி முதலாளிகளுக்கு வாடகைக்கு விடுகிறார்கள்.

பர்மா

பேசாத படத்தை மூன்று மணி நேரம் பார்த்துக்கொண்டு, சுமார் 400 தலைப்புகளைப் படித்து அனுபவிக்கக் கூடிய ஜனங்கள் பர்மா ஒன்றில்தான் இருக்கிறார்கள்.

பர்மா சிறிய நாடு. மார்க்கெட் மிகவும் சொற்பமானது. பட வருமானமும் கொஞ்சமே. ஆகையால்

நடிகர்களும் டைரக்டர்களும் அற்பச் சம்பளமே பெறுகிறார்கள்.

ஆச்சர்யச் செயல்கள் நிறைந்த 'ஸ்டண்ட்' படங்களில் மற்ற நாட்டவர்களைப் பர்மியர் மிஞ்சி விடுகிறார்கள். பர்மியர் வீரமுள்ள மக்கள்; சாவுக்கு அஞ்சாதவர்கள். 'ஸ்டண்ட்' படங்களில் பெரும்பாலானவையும் உண்மையாகவே நடித்து எடுத்தவை; காமிராத் தந்திரங்கள் அல்ல.

பர்மாவில் பிலிம் தொழில் இளமைப் பருவத்திலேயே இருக்கின்றன. பர்மாவில் மேதைகளுக்குப் பஞ்சமில்லை; ஆனால், அவர்களுக்குச் சரியான சந்தர்ப்பம் வேண்டும். பர்மாவின் அழகி மெய் ஷீன், பர்மியரின் செல்வ 'நட்சத்திர'மான கின் மியின் யீ போன்றவர்களை வைத்துக்கொண்டு இன்னும் சிறந்த படங்களைத் தயாரிக்கலாம்.

சினிமாவுக்குச் செல்வதெப்படி?

ஒரு நண்பர் புத்தகக் கடைக்குச் சென்றார். 'ஐந்து ரூபாய்க்கு நல்ல புத்தகங்கள் கொடுங்கள்' என்றார். "எம்மாதிரிப் புத்தகங்கள் வேண்டும்" என்றார் கடைக்காரர். 'எந்தப் புத்தகமாவது கொடுங்கள்; பார்வைக்கு நன்றாக இருக்க வேண்டும். நான் படிக்கும் வழக்கமில்லை. என் வீட்டிற்கு வருகிற விருந்தாளிகட்குக் கொடுப்பதற்காகத்தான் வாங்குகிறேன்' என்றார் நண்பர். எல்லோரும் இவரைப் போலவா இருப்பார்கள்?

நாம் புத்தகக் கடைக்குச் செல்கிறோம். குறிப்பிட்ட புத்தகமொன்றைக் கேட்கிறோம். இல்லையேல் இன்ன ஆசிரியர் எழுதிய புத்தகம் இருக்கிறதா என்று கேட்கின்றோம். அப்படியில்லாவிட்டால் இன்ன விஷயத்தைப் பற்றிய புத்தகம் இருக்கிறதா என்று கேட்கிறோம். இந்த மாதிரிதான் சினிமா விஷயத்திலும்.

சினிமாப்படம் பார்க்க ஆறணக் கொடுக்கிறோம். ஆனல் கண்ட படத்துக்கெல்லாம் ஆறணக் கொடுத்தால் கேவலமான படங்களை உற்பத்தி செய்கிறவர்களுக்கு நாம் ஆதரவளித்தவர்களாகிறோம். ஒரு படத்தைப் பார்க்கப் போகுமுன் நாம் நன்றாக யோசிக்க வேண்டும். கதை நமக்குப் பிடித்தமானதா? அதில் நடிக்கும் நட்சத்திரங்கள் நமக்குப் பிடித்த

மானவர்களா ? அதை டைரக்ட் செய்தவர் திறமை யானவரா என்பதையும் கவனிக்க வேண்டும். நமக்குப் பிடித்த நட்சத்திரங்களா யிருக்கலாம். ஆனால் அவர்கள் கேவலமான படத்தில் நடித்திருக்கலாம். இத்தகைய படங்களை யெல்லாம் நாம் ஒதுக்கித் தள்ள வேண்டும். வெளிவருகின்ற படங்களை யெல்லாம் பார்க்க வேண்டுமென்று எண்ணுவது மிகத்தவறு. அச்சாகிற புத்தகங்கள் அனைத்தையும் யாராவது படிக்கிறார்களா ?

பாரதியார் பாட்டில் உள்ள இன்பம் 'இல்வாழ்க்கையின் இரகசிய'த்தில் கிடைக்குமா ? 'எமில் ஸோலா' படத்தைப் பார்ப்பதால் உண்டாகும் உணர்ச்சி 'டார்ஜான்' படத்தில் உண்டாகுமா ?

சினிமாக்கலை ஆரம்ப தசையிலுள்ள நம் நாட்டில் பாமர மக்கள் இவ்விஷயங்களைச் சரியாக உணர முடியாது. ஆனால், 'விஷயந் தெரிந்த'வர்கள் இதைப் பற்றி யோசிப்பார்களா ?

நம் நாட்டில் பலர் ஆங்கில படங்கட்கு—சிறப்பாக அமெரிக்கப் படங்கட்குச் செல்கின்றனர். ஆனால் எத்தனை பேர் அந்தப் படங்களை ரசிக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. அமெரிக்கப் படங்கள் அந்நாட்டு வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. புத்தகப் பூச்சிகளான பலர் அமெரிக்கப் படங்களை ரசிக்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். சிலர் ஆங்கிலப் படங்கட்குச் சென்றால் கௌரவமென்று கருதுகின்றனர். வேறு சிலர் ஆங்கிலப் படங்களைப் பற்றிச் சதா குறை கூறிக்கொண்டிருக்கின்றனர்.

அமெரிக்காவிலே, அமெரிக்கர்களுக்காக, முக்கியமாக அமெரிக்கப் பெண்களுக்காகத் தயாரிக்கப்படும் ஒரு படம் இந்தியர்கட்கு எவ்வாறு ஏற்றதாக இருக்கமுடியும்? அமெரிக்க டைரெக்டர்கள் மிகக் கெட்டிக்காரர்கள். பணம் சம்பாதிப்பதற்கேற்ற வழியில் படங்களைத் தயாரிக்கின்றனர். படங்களுக்குச் செல்கின்றவர்களில் பெரும்பாலோர் பெண்கள். அவர்களைத் திருப்திப்படுத்தினால்தான் படம் வெற்றியடையும். பெண்கள் காதற் படங்களைத்தான் விரும்புகின்றனர். இக் காரணங் கொண்டுதான் அமெரிக்காவில் அபரிமிதமாகக் காதற் படங்களைத் தயாரிக்கின்றனர்.

ஒரு பெண் சினிமாவுக்குச் சென்றால், படம் பார்க்கும்பொழுது தன்னை கதாநாயகியாக நினைத்துக் கொள்கிறாள். தான் அழகா யிருப்பதாகவும் தனக்குப் பிறரைக் கவர்ச்சி செய்யும் தன்மை யிருப்பதாகவும் எண்ணுகிறாள். இதனால்தான், கதாநாயகி அழகாகவும் பிறரைக் கவரும் தன்மை யுடையவளாகவும் இருக்கிறாள். படம் பார்க்கும் பெண் தான் உயர்ந்த ஆடைகளை அணிய விரும்புகிறாள். இதைக் கருதி கதாநாயகிக்கும் நல்ல ஆடைகளைக் கொடுக்கிறார்கள். கதாநாயகி பல கஷ்டங்களை அடைந்து கடைசியாகக் காதலனை அடையவேண்டு மென்று இப் பெண் விரும்புகிறாள். எனவே படமும் சந்தோஷமாக முடிகிறது.

பெரும்பாலான அமெரிக்கர்கள் தங்கள் பெண் சிநேகிதர்களை திருப்திப் படுத்துவதற்காகவே சினிமாவுக்குச் செல்கிறார்கள். தியேட்டருக்குள் சென்றால்

இருட்டாகவும், சிறிது உஷ்ணமாகவும் இருக்கும். அன்றியும் பிடித்துக் கொள்வதற்கு ஒரு மிருதுவான கையும் இருக்கிறது. இந்த ஆண்களைப் பற்றிப் பட முதலாளிகட்கு என்ன கவலை? படங்களுக்குப் பண வருவாய் கிடைப்பது பெண்களாக இருக்கும்வரை, அவர்களுக்காகத்தான் டைரக்டர்கள் படங்களைத் தயாரிப்பார்கள்.

சில வருடங்கட்கு முன்னே ஒரு தமிழ்ப் படம் பார்த்தேன். அதில் ஒரு நடிகர் தூங்கும் பெண்ணை முத்தமிட்டார். முத்தமிட்ட சப்தம் மூன்று பர்லாங் தூரம் கேட்டிருக்கும். அவர் முத்தமிட்டதுகூட ஆச்சரியமில்லை. அந்த முத்தத்தின் சப்தத்தைக் கேட்டு அந்தப் பெண் விழிக்காமல் இருந்தாளே, அது தான் எனக்கு ஆச்சரியமா யிருந்தது!

நம் நாட்டில் பகிரங்கமாக முத்தமிடுவது—அதுவும் பெண்களை முத்தமிடுவது நினைப்பதற்கும் முடியாத காரியம். சிலர், படத்தில் முத்தமிடுவதைக் கண்டால் 'ஆபாசம்' என்கிறார்கள். ஆனால் முத்தமிட வேண்டுமென்று இவர்கட்கு மனதிற்குள்ளே அளவு கடந்த ஆசை.

தற்பொழுதுள்ள தமிழ் சினிமாக்களில் நேரடியாக முத்தமிடப் பயப்படுகிறார்கள். சில படங்களில் முத்தமிடுவதை 'சிலூயத்' (உருவம் மட்டும் கருப்பாகத் தோன்றும்) தாக எடுத்துள்ளார்கள்.

எல்லா வகையிலும் முன்னேறி விட்டதாகப் பெருமை பாராட்டிக் கொள்ளும் ஜப்பான் முத்தத்தில் பின்னே நிற்கிறது. சினிமாப் படங்களில் முத்த

மிடக் கூடாதென அரசாங்கம் உத்தரவிட்டிருக் கிறது.

அமெரிக்கப் படங்களில் முத்தம் இல்லாத படங் கள் இருக்கிறதா என்பது சந்தேகம். அமெரிக்காவில் கீழ்த்தரமான தியேட்டர்களில் படத்தில் கதாநாயக னும் கதாநாயகியும் முத்தமிடும்பொழுது, படம் பார்க் கும் தம்பதிகளிற் பலர் முத்தமிட்டுக் கொள்வார்கள்.

நமது நாட்டில் சினிமா நடிகன் என்று ஒருவன் தன்னைக் கூறிக்கொண்டால் கௌரவமான குடும்பத் திலே ஓரிரவு தங்குவதற்கு அவனை அனுமதிக்கமாட் டார்கள். இதற்கு சினிமா நடிகர்களும் நடிகைகளும் ஒழுக்கத் தவறுள்ளவர்கள் என்ற எண்ணமே காரண மாகும். இத்தகைய ஒழுக்கத் தவறுள்ளவர்கள் நடிக் கும் படங்கள் எவ்வாறு உயர்ந்ததாக இருக்கமுடியும்? நம் நாட்டில் தயாராகும் நல்ல படங்களைவிட கெட்ட படங்கள்தான் அதிகம். நம் நாட்டுச் சிறுவர்கள் எல்லாப் படங்கட்கும் செல்கின்றனர். பல படங் கட்கு நாமே அழைத்துச் செல்கின்றோம்.

அமெரிக்காவில் பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் உள்ளன. இச்சங்கங்கள் அனுமதித்த படங்களுக் குத்தான் சிறுவர்கள் செல்லலாம்.

இங்கிலாந்தில் A., U. என்று படங்களை இருவித மாகப் பிரிக்கிறார்கள். ஏ. என்ற படத்திற்கு வயது வந்தவர்கள்தான் செல்லலாம். யு. என்பது யூனிவர் ஸல்—யாரும் இப் படம் பார்க்கலாம்.

ஒவ்வொரு நாட்டிலும் இத்தனை வயதுக் குட் பட்டவர்கள் தனிமையாகச் சினிமாவுக்குச் செல்லக்

கூடாது என்று சட்டமியற்றியுள்ளார்கள். இந்தியாவில் இம்மாதிரிச் சட்டமில்லை.

சில தமிழ்ப் படங்களைப் பார்க்கும் சிறுவர்கள் பிற்காலத்தில் ஒழுக்கக் குறைவுடையவர்களாக இருப்பார்களானல் ஆச்சரியப்படுவதற்கில்லை. இரவிலே ஒரு மாப்பிள்ளை புரண்டுபோய் மாமியார் காலில் விழுவதையும், குருக்கள் மனைவியோடு கள்ளத்தனமாக நட்புக்கொண்டு ஒருவன் குழந்தையைக் கொல்லும் காட்சியையும் காணும் சிறுவர்கள் மனதில் எத்தகைய எண்ணங்கள் தோன்றக்கூடும்? ஆபாசமான படங்களை சென்ஸர் போர்டார் தடுக்கவேண்டும். அல்லது படங்களைப் பாகுபடுத்தி இன்ன படங்களைத்தான் சிறுவர்கள் பார்க்கவேண்டுமென்று ஏற்பாடு செய்யவேண்டும்.

சினிமாத் தியேட்டர்கள்

நமது ஊருக்கு ஒரு சினிமாப் படம் வருகிறதென வைத்துக் கொள்வோம். நமக்குப் படம் பார்க்கும் ஆசை நிறைய இருக்கிறது. படம் எப்படி என்று நாம் கவனிப்பதில்லை. தியேட்டரைப் பற்றியும் நமக்குக் கவலை கிடையாது. எப்படியாவது - எவ்வளவு கஷ்டப்பட்டாவது படத்தைப் பார்த்து விட்டால் போதும்! அதுதான் நமது லட்சியம். படம் பார்க்கும் சந்தோஷத்திலே அதனுல் ஏற்படும் சகல கஷ்டங்களையும் மறந்து விடுகிறோம்.

பெரிய ஊர்களிலே ஒரே நாளில் பதினைந்து இருபது படங்கள் காட்டப்படுகின்றன. அப்பொழுது எது நல்ல பட மென்று பார்க்கிறோம். அதோடு மட்டும் நாம் நிற்கின்றோமில்லை. எது நல்ல சினிமாத் தியேட்டர் என்றும் பார்க்கிறோம். நமக்குப் பிடித்தமான ஒரு தியேட்டரிலே நமக்குகந்த ஒரு படம், அதிலும் நமது உள்ளத்தைக் கவரும் நட்சத்திரங்கள் நடிக்கும் படம் வந்து விட்டால் நம்மைப் போல் அதிர்ஷ்டசாலிகள் யாரிருக்கிறார்கள் ?

வெளி நாடுகளிலே அருமையான சினிமாத் தியேட்டர்கள் அமைத்திருக்கிறார்கள். கோடைகாலத்திலே தியேட்டருக்குள் குளிர்ந்த காற்று வீசவும், குளிர் காலத்திலே தியேட்டருக்குள் உஷ்ணக் காற்று வீசவும் ஏற்பாடு செய்துள்ளார்கள். வெளிநாடு

களிலே சிலர் படம் நல்லதா? கெட்டதா? என்று கூட கவலைப்படுவதில்லை. கொதிக்கும் வெயிலிலே மூன்று மணி நேரம் சௌகரியமாக உட்கார்ந்திருப்ப தற்காகவே பலர் சினிமாவுக்கு செல்கின்றனர்.

'எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம்' என்று மட்டும் நாம் பாடுகிறோம். சினிமாத் தியேட்டரிலே அப்படி யிருக்கிறதா? நம் நாட்டிலே வகுப்புகள் நான்கு எனச் சொல்கிறார்கள். ஆனால் சினிமாத் தியேட்டர்களிலே பல இடங்களில் ஐந்து அல்லது ஆறு வகுப்புகள் இருக்கின்றன. சந்தேகமே கிடையாது! இந்த வகுப்புகளிலும் உயர்வு தாழ்வு இருக்கத்தான் செய்கிறது.

இந்தியா போன்ற ஏழை நாட்டிலே ஒரே வகுப்பும் ஒரே கட்டணமும் இருந்தால் தியேட்டர்காரர்கட்குப் போதிய வருமானம் கிடைக்காதென்று கூறலாம். அன்றியும் இன்றைய நிலையில் ஒரே வகுப்பு இயலுமா என்பதும் மற்றொன்று. தலையில் வேப்பெண்ணெய் தேய்த்துக் கொண்டுள்ள ஒரு கிராம வாசிக்கு அருகிலும், மூன்று நாட்கள் வரை குளிக்காத ஒரு தொழிலாளியின் பக்கத்திலும் உட்கார நாகரிகமுள்ள யாரும் மனமொப்ப மாட்டார்கள். இந்த நிலையிலும் தியேட்டர்காரர்கட்கு ஒரு வழியுண்டு. தியேட்டரில் அத்தனை 'ஸீட்'களையும் ஒரே மாதிரி நாற்காலியாக அமைக்கலாம். கட்டணத்தில் வித்தியாசம் இருக்கட்டும். இந்த வித்தியாசத்துக்குத் தக்கபடி, உட்காருகின்ற பகுதியை முன்னேயோ அல்லது பின்னரோ ஒதுக்கிக் கொள்ளட்டும். இரண்டணா கொடுத்தாலும்

சரி, இரண்டே கால் ரூபாய் கொடுத்தாலும் சரி, நாற்காலி ஒரே மாதிரிதான். இடம் மட்டும்தான் வித்தியாசம். இம் முறையைச் சமீபத்தில் பம்பாயில் ஆரம்பித்துள்ள சில தியேட்டர்காரர்கள் கையாளு கின்றனர். தமிழ் நாட்டுத் தியேட்டர்களும் ஏன் கையாளலாகாது?

எல்லாவற்றையும் போல தியேட்டர்களை சுத்த மாக வைத்துக் கொள்வதிலும் தமிழர்கள் பின்னணி யில்தான் நிற்கிறார்கள். தமிழ்ப் படங்களைவிடத் தமிழ்த் தியேட்டர்கள் மிகவும் 'மோசம்.' சென்னை யில் ஒருவன் 'மாட்டினி'க்குச் சென்று திரும்பும் பொழுது அவனைப் பாருங்கள். அசல் நடைப்பிணம் போலத்தான் இருப்பான்.

நியூயார்க் நகரில் ரேடியோ சிட்டி மியூசிக் ஹால் என்றொரு தியேட்டர் இருக்கிறது. உலகத்திலேயே இதைத்தான் பெரிய தியேட்டர் என்று கருதுகிறார் கள். ஆறு மாடிகள். ஆறாயிரத்தைந்நூறு மக்கள் ஒரே காலத்தில் உட்காரலாம். தியேட்டரின் மேன் மாடிக்குச் செல்ல 16 'லிப்டுகள்' இருக்கின் றன. வெளியே செல்வதற்கு 64 கதவுகள் இருக்கின் றன. தியேட்டருக்கு உள்ளே சென்றால் ஒரு அரண் மனையைப் போலிருக்கிறது. அங்கு செல்வதால் உண் டாகும் இன்பம், செல்கிறவர்கட் கெல்லாம் பொது வுடைமை. மாலை 4 மணிக்கு ரொட்டியும் டீயும் எல்லோருக்கும் இனாமாக வழங்குகிறார்கள்.

'பாரடைஸ்' என்பது நியூயார்க் நகரிலுள்ள மற்றொரு தியேட்டர். சுமார் மூவாயிரம் ஜனங்கள்

உட்காரலாம். மூன்று மாடிகள் உள்ளது. உள்ளே சென்றால் வெட்ட வெளியில் உட்கார்ந்திருப்பது போலத் தோன்றும். நீலநிற ஆகாயம்—நகர்ந்து கொண்டிருக்கும் மேகங்கள் — பிரகாசிக்கின்ற நட்சத்திரங்கள் இவை யெல்லாம் இயற்கை யல்ல. செயற்கைதான். மனோ ரம்மியமான இத் தியேட்டரிலே ஆண்களும் பெண்களும் ஜோடி ஜோடியாக அமர்ந்து படம் பார்த்து மகிழ்வது எவ்வளவு இன்ப மான காட்சி!

அமெரிக்கத் தியேட்டர்களிலே ஒரு புரோகிராம் என்பது இரு பெரிய படங்களும் மற்றும் இரண்டு அல்லது மூன்று சிறு படங்களும் கொண்டதாகும். இரண்டு படங்களை எப்படி ஒரே சமயத்தில் பார்ப்ப தென்று தமிழர்கள் மலைக்கலாம். ஆனால் ஆங்கிலப் படத்தின் சராசரி ஓடும் நேரம் ஒன்றேகால் மணி தான் என்பதை மறந்துவிடக் கூடாது. இரண்டு படத்திற்கு இரண்டரை மணி நேரம். மற்றும் மூன்று சிறு படங்கள் - ஒன்று செய்திப்படம். இதன் நீளம் சுமார் 1000 அடி. காட்டும் நேரம் பத்து நிமிஷம். அந்த வாரத்தில் உலகத்தில் நடக்கும் செய்திகளிற் பல இச் சுருணைகளில் வந்துவிடும். 'கார்ட்டூன்' எனும் வேடிக்கைப் படம் பத்து நிமிஷம் காண பிப்பார்கள். பெரும்பாலும் இது கலர்ப்படமாக இருக்கும். மற்றுமொன்று அறிவூட்டும் சிறு படமாக இருக்கும். இரண்டு பெரிய படங்களிலே ஒரு படமாவது ஜனங்களுக்குப் பிடித்தமாக இருக்கும். பொது வாகப் பெரும்பாலான மக்கள் செய்திப் படத்தையும் கார்ட்டூனையும் கண்டு மகிழ்கின்றனர். ஒரு புரோ கிராமில் ஐந்து படங்கள் காண்பிப்பதால் அதனை

நிரவல் செய்ய அவர்கட்கு வசதி யிருக்கிறது. தமிழ்ப் படம் ஒன்று மட்டமாக இருந்து விட்டால் 'பணம் போச்சு' என்று திட்டிக்கொண்டே வெளியில் வருகிறோ மல்லவா. வெளி நாட்டில் அப்படி யில்லை. பணம் கொடுக்கும் மக்கள் பொதுவாக திருப்தியோடுதான் வெளியில் வருகின்றனர்.

நம் நாட்டுத் தியேட்டர்களிலே பல குறைகள் இருக்கின்றன. அதற்கு தியேட்டர்காரர்கள் முற்றிலும் குற்றவாளிக ளல்லர். படம் பிடிக்கும் முதலாளிகள் தியேட்டர்காரர்களிட மிருந்து முடிந்தவரை பணத்தை உறிஞ்சுகின்றனர். படம் பிடிக்கும் முதலாளிகளுக்குத் தியேட்டர்காரர்களைப் பற்றிக் கவலையே கிடையாது. படம் பிடிக்கும் தொழில், இன்றைய நிலையில் சூதாட்டம் போலிருக்கிறது. படம் பிடிப்பவர் மறு வருடத்திற்கு வருவது அபூர்வம். தியேட்டர்காரர்களுக்குக் கிடைக்கும் வீதாசாரம் சொற்பம். தியேட்டர்காரர்களுக்குள் ஒற்றுமை கிடையாது. பல தியேட்டர்களைக் கொண்ட ஒரு ஸ்தாபனமும் கிடையாது. இங்கிலையில் தியேட்டர் காரர்கள் ஒரு படம் தயாராகு முன்னரே அதற்கு ஏற்பாடு செய்துவிடுகின்றனர். இந்த அநீதங்கள் எல்லாம் ஒழிந்தால்தான் தியோட்டர்காரர்கள் முன்னுக்கு வரலாம்.

முதலாவதாகத் தியேட்டரைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். திரைக்குப் பக்கத்தில் எல்லோருக்கும் தெரியும்படியாக பெரிய கடிகாரமொன்றை அமைக்கவேண்டும். குடிப்பதற்கு நல்ல தண்ணீர் சுலபமாகக் கிடைக்கும்படி செய்தல்

மறைமலையடிகள் நூல்நிலையம் MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS

வேண்டும். சில தியேட்டர்காரர்கள் சோடா,கலர் வியாபாரத்தை முன்னிட்டு நல்ல தண்ணீர் சுலபமாகக் கிடைக்க வழியில்லாது செய்துவிடுகிறார்கள். இக் கொடுமையெல்லாம் தொலைய வேண்டும்.

சிதோஷ்ண நிலை காட்டும் கருவிகளை ஆங்காங்கு மாட்டிவைப்பது நல்லது. ஜனங்கள் நிறைந்துள்ள பொழுது துர்நாற்றம் பரவாதபடி நல்ல பரிமள செண்டுகளைத் தெளிப்பதும் நல்லது.

பெரிய படங்களின் நீளத்தைக் குறைப்பதோடு செய்திப் படம், அறிவூட்டும் சிறு படங்கள் முதலியவற்றைத் தயாரிக்கும்படி தியேட்டர்காரர்கள் பட முதலாளிகளைக் கட்டாயப்படுத்தவேண்டும்.

குளிர் காற்று நிறைந்த அருமையான தமிழ்த் தியேட்டரிலே ஆறணுவுக்கு, குஷன் நாற்காலியிலே பத்தாயிரம் அடி தமிழ்ப் படத்தையும் தமிழ் செய்தி, கார்ட்டூன் படங்களையும் கண்டு மகிழும் காலம் என்று வரப்போகிறது?